தமிழரசு

16.1.1994 ரூ.3




பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
# காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்




தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


சாகாவரம் பெற்ற சரித்திர நாயகர்
*—மாண்புமிகு முதல்வர்* ... 2

வள்ளுவர் வழியே வாழும் நெறி ... 3

சட்டப்பேரவையில் ... 4

பெண்மையும் ஆண்மையும் வெல்க
என்றது தைத்திருநாள்! ... 8

இ.பி.கோ.-வின் கீழ் தமிழகத்தில்
நடைபெற்றுள்ள குற்றங்கள்
பெரும்பாலான மாநிலங்களைவிடக்
குறைவாகவே உள்ளன.
*— மாண்புமிகு முதல்வர்* ... 9

படமும்-செய்தியும் ... 13

கிராமப்புறக் கைவினைஞர்கள்
வாழ்க்கைத்தரம் உயர்ந்திட ... 17

ஆக்கப் பணிகள் சிறந்துவரும்
அலங்காநல்லூர் ஒன்றியம் ... 19

அறிவுச் செல்வம் பெருக...
ஆற்றல் வளர... ... 21

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த
கல்வெட்டுக்கள் கண்டுபிடிப்பு ... 23

கரும்பின் கதை ... 24

கைத்தறியில் கம்ப்யூட்டர் மூலம்
கண்கவர் வடிவமைப்பு ... 27

ஆடு வளர்ப்பும் கூட்டுறவுச் சங்கங்களும்... 29

உலக நாடுகள் பங்கு கொள்ளும்
பன்னாட்டு அழைப்புத் தடகளப்
போட்டிகள் ... 33

பொங்கல் வந்தது (கவிதை) ... 36

திருக்குறளார் வீ. முனிசாமி ... 37

தெற்காசிய நாடுகளின் விளையாட்டு
நிகழ்ச்சிகள் சென்னையில்
நடைபெறும் ... 39

69 சதவித இட ஒதுக்கீடு:
சட்ட முன் வடிவு ... 41

காவல்துறைக் குடும்பத்துக்குச்
சிறப்பு இன்சூரன்ஸ் திட்டம் ... 46

20-வது அ.இ.சுற்றுலா-தொழில்
பொருட்காட்சித் தொடக்க விழா ... 47


## வாழ்த்தும் வணக்கமும்

அனைவருக்கும்
'தமிழரசு' இனிய
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்து
மகிழ்கிறது!
வாசகர்களுக்கு...
முகவர்களுக்கு...
விளம்பரதாரர்களுக்கு
எழுத்தோவியங்களை
அளித்திடும்
அறிஞர் பெருமக்களுக்கு...
எங்களுக்கு என்றும்
துணையிருக்கும்
நண்பர்களுக்கு...
மீண்டும்
வாழ்த்துக்களையும்
வணக்கங்களையும்
தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2025

தைத் திங்கள் - 3

மலர்:24 இதழ்:14

16-1-1994

விலை: ரூபாய் மூன்று






# சாகா வரம் பெற்ற சரித்திர நாயகர்

## -மாண்புமிகு முதல்வர்



அட்டை சொல்லும் செய்தி:

''தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று''

என்ற வள்ளுவரின் வாக்கிற் கொப்ப, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தோன்றி-வளர்ந்து-ஈடுபட்ட துறைகள் அனைத்திலும், தன் புகழ் முத்திரையினைப் பதித்தவர் ஆவார்.

கோடிக்கணக்கான ஏழைகளின் உதடுகளுக்குப் புன்னகையாகவும், புது நம்பிக்கையாகவும், தன் இளமைக் காலம் முதல், திரைப்படத் துறையிலும்-அரசியல் வாழ்விலும் திகழ்ந்தவர் புரட்சித்தலைவர்.

மக்களோடு பழகி, மக்களோடு வாழ்ந்து, மக்களுக்காக உழைத்து, மக்களுக்கு வாரி வழங்கி, மக்களுக்காகச் சிந்தித்து, 'மக்கள் திலகமாய்', 'மன்னாதி மன்னனாய்', வாழ்ந்து மறைந்த அவரைத்தான், இன்று இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள், தங்கள் இதயக் கோயிலில் தங்க சிம்மாசனமிட்டு அமர்த்தி மகிழ்கிறார்கள்.

அவர் மக்களிடம் காட்டிய அன்பும், பரிவும்-மக்கள் அவரிடம் காட்டிய ஆர்வமும், பாசமும், உலக வரலாறு காணாத அற்புதங்களை நிகழ்த்திக் காட்டின.

அவர் ஏற்றுக்கொண்ட அரசியல் ஆசானாம் பேரறிஞர் அண்ணாவை, 1967-இல் ஆட்சிக் கட்டிலில் அமர்த்திக் காட்டிடும் அளவுக்கு, அவரது மக்கள் செல்வாக்கு அன்றைக்குத் திகழ்ந்தது.

அண்ணா அவர்கள், கூட்டணி ஆட்சி அமைக்கும் அளவுக்கே தனக்கு வலிவுள்ளது எனக் கருதிக் கணக்கிட்டுக் கொண்டிருந்த வேளையில், புரட்சித்தலைவருள் மறைந்திருந்த மக்கள் சக்தி, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் தனிப் பெரும்பான்மை பலத்தை அன்றைக்கு உண்டாக்கிக் காட்டியது.

அச்சரித்திர நாயகனின் வரலாறு, அதன் பின்னர், தமிழ்நாட்டில் அவர் யாரை அடையாளம் காட்டுகிறாரோ, அவர் தான் ஆட்சி அரியணை ஏறி அமர முடியும் என்னும் அளவுக்கு, உயர்ந்தோங்கியது.

அவரால் ஆட்சிக் கட்டிலுக்கு ஏற்றி விடப் பட்டோர், ஏறிய ஏணியை இடறிவிட்ட சூழ்நிலையில்தான்.1972-இல் தனக்கென - தன்னை நம்பி இருந்தோர்க்கென, தனி இயக்கம் கண்டார்.

அரசியலில் தனக்குக் கலங்கரை விளக்காய்-வழிகாட்டியாய்த் திகழ்ந்த பேரறிஞர் அண்ணாவின் புகழை-பெருமையை-பெயரை, என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யும் நோக்கில், 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' எனத் தனது அரசியல் இயக்கத்திற்கும் பெயர் சூட்டினார்.

அந்த ஆலமரம் தான், எண்ணற்ற இலட்சிய வேங்கைகளைத் தன்னகத்தே பெற்ற, திராவிட இயக்கப் பரிணாம வளர்ச்சியாக இன்றைய தினம் காட்சியளிக்கிறது.

புரட்சித் தலைவரின் புனிதப் பயணம் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறுகிறது. 'எம்.ஜி.ஆர்.'-'எம்.ஜி.ஆர்.'- என்னும் தாரக மந்திரம் சாகாவரம் பெற்ற அச்சரித்திர நாயகனின் தத்துவம்; தொடர்ந்து நமக்குத் தலைமை ஏற்று வழி நடத்திச் செல்கிறது.

புரட்சித் தலைவரின் சாதனைகள் கலை உலகில் கணக்கில் அடங்காதவையாகும்; அரசியல் உலகில் அதைவிட அதிகமாகும். எத்தனையோ தலைவர்களைக் கண்டுள்ளது இந்திய நாடு; ஆனால் மூளை பலமும், இளகிய இதயமும் கொண்ட மாமனிதர்கள், ஒரு சிலரே ஆவர். அவர்களில் முதன்மையானவர்கள்தான், அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அண்ணாவும், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரும் ஆவர்.

*(பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரை: 17.1.'92).*

# வள்ளுவர் வழியே வாழும் நெறி



## —மாண்புமிகு முதல்வர்

'உலகத்தின் முதல் மனிதன் தமிழன்! முதல் தாய்மொழி தமிழ்! முதல் பண்பாடு தமிழ்ப் பண்பாடு! முதல் நாகரிகம் தமிழ் நாகரிகம்! அந்தப் பெருமைமிகு தமிழ் இனத்தின் தலையாய நூல் திருக்குறள்! இருபது நூற்றாண்டுகளுக்கு முன் சொல்லப்பட்டது. இந்த நூற்றாண்டுக்கும் உரியதாக விளங்க முடியுமென்றால், இனிவரும் நூற்றாண்டுகளுக்கும் ஏற்றது என்றால், அந்த ஒப்பிலாச் சிந்தனைச் செறிவை என்னவென்று சொல்வது?

ஓர் உயர்ந்த இலக்கியத்தின் அடையாளம், அது அறிஞர்கள் அனைவராலும் ஏற்கக் கூடியதாக மட்டும் இருந்தால் போதாது; சாதாரண மக்களாலும் புரிந்துகொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும். இந்தத் தத்துவத்தை உண்மையாக்கும் ஒரே நூல், திருக்குறள் ஆகும். அளவிலே சிறியது; நடையிலே எளியது; ஆற்றலிலே அரியது, என்ற பெருமைக்கு ஒரே எடுத்துக்காட்டு - திருக்குறள். அந்தத் திருமறையை நமக்குத் தந்த சீரிய சிந்தனையாளர் திருவள்ளுவர்.

தமிழ்நாடு புகழ் கண்டதற்கு, ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால் வான்புகழ் கொண்டதற்கு ஒரே காரணம், வள்ளுவர்! வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடினார். கவிஞர்கள் வார்த்தைகளைச் செதுக்கிச் செதுக்கி எழுதுகிறவர்கள்.

வள்ளுவனைத் தமிழ்நாடு ஊருக்குத் தரவில்லை; ஒரு நாட்டுக்குத் தரவில்லை. ஒரு இனத்துக்குத் தரவில்லை; ஒரு மொழிக்குத் தரவில்லை; உலகுக்கே தந்தது - என்று உணர்ந்து உணர்த்தினார் பாரதியார்.

'திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது' - என்று தீர்ப்புக் கூறினார் தந்தை பெரியார்.

—'புரட்சித் தலைவியின் முழக்கம்' தொகுதி-1-லிருந்து.



# சட்டப்பேரவையில்...



**தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டம் 30.12.93 முதல் 5.1.94-ஆம் நாள் வரை நடைபெற்றது. அந்நாட்களில், சட்டப்பேரவையில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சிக் குறிப்புகள் இங்கே இடம் பெறுகின்றன:**

## தமிழகத்தில் 69 சதவிகித இடஒதுக்கீடு (30.12.93)

தமிழ்நாட்டில் தற்சமயம் அமலிலிருக்கும் 69 சதவிகித இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்த வகைசெய்யும், வரலாற்றுச் சிறப்புமிக்க சட்ட முன்வடிவை சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

உறுப்பினர்கள் அனைவரும் துளியும் மறுப்பே இல்லாமல் ஒரு மனதாக ஆதரவு தெரிவிக்கவே, அதை அறிமுகம் செய்யும் தீர்மானம் நிறைவேறியது. எல்லா உறுப்பினர்களும் மேஜையைத் தட்டி, தங்கள் பெருமகிழ்ச்சியை உற்சாகத்தோடு தெரிவித்துக் கொண்டார்கள்.

## விற்பனை வரிமூலம் வருமானம்

ஓட்டல்களில் உணவுப் பண்டங்களுக்கு விதிக்கப்படும் விற்பனை வரி மூலம் தமிழக அரசுக்கு ஆண்டுதோறும் ரூ.25 கோடி வருமானம் கிடைப்பதாக- ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தெரிவித்தார்.

## வனத்துறை ஆலோசனைக் குழு

வனத்துறை ஆலோசனைக் குழு அமைக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருப்பதாகவும், விரைவில் அது நிறைவேற்றப்படும் என்றும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கு. லாரன்ஸ் அவர்கள் தெரிவித்தார்.

## திரையரங்குகளில் குளிர்சாதனம்

தமிழகத் திரையரங்குகளில் உள்ள குளிர்சாதன வசதி பற்றிய வினா ஒன்றினுக்கு, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் இவ்வாறு பதில் சொன்னார்:

''சரியான முறையில் ஏர்கண்டிஷன் வசதி செய்து தராமல் இயங்கும் சினிமா தியேட்டர்கள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க, லைசென்ஸ் வழங்கும் அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கலெக்டர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உத்தர விட்டுள்ளார்''



## ஒரு சொல் கேளீர்!

**படித்தவன் உழ வேண்டும்; உழுபவன் படிக்க வேண்டும். படிப்பான் அறிவுப் பசியைத் தீர்க்க - உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்பட வேண்டும்!**

—பேரறிஞர் அண்ணா

## இட ஒதுக்கீடு: வேண்டுகோள் (31.12.93)

தமிழகத்தில் 69 சதவிகித இட ஒதுக்கீடு தொடர, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்த சட்ட முன்வடிவு குறித்த விவாதத்திற்கு முன்னுரையாக மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் உரையாற்றினார்.

“69 சதவிகித இட ஒதுக்கீடு தொடர்ந்து நீடிக்க, நம்முடைய மாநிலத்திற்குப் பொருந்தக் கூடிய அளவில் ‘31-சி’ என்ற சட்டத்தைக் கொண்டு வருகிறோம்; இதை ஒரு மனதாக அனைவரும் ஏற்க வேண்டும்” என்று அப்போது அவர் கேட்டுக் கொண்டார்.

“தமிழ்நாட்டில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தொடர்ந்து அமல்படுத்த இங்கே தனியாக ஒரு சட்டம் இயற்றினாலும், தொடர்ந்து அரசியலில் சட்டத்தைத் திருத்த மத்திய அரசை வலியுறுத்துவோம்” என்று மேலும் கூறிய அவர்- “இங்கே நிறைவேற்றப்படும் தனிச் சட்டத்திற்குப் பாராளுமன்றத்தில் முழு ஆதரவு கிடைக்கும்” என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

## வீடியோ தியேட்டர்

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள், அரசு மூலம் புதிதாக அனுமதிக்கப்படவிருக்கும் வீடியோ தியேட்டர் பற்றித் தெரிவித்ததாவது:

“தமிழ்நாட்டில் வீடியோ தியேட்டர்களுக்கு லைசென்சு வழங்க அரசு முன் வந்திருக்கிறது. இதற்காக 1984-இல் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால், கடந்த ஒன்பதாண்டுகளாகத் தமிழ்நாட்டில் வீடியோ தியேட்டர் தொடங்க லைசென்சு வழங்கப்படவில்லை.

“ஆனால், இந்த ஆண்டு தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் என்ற இடத்தில் வீடியோ தியேட்டர் கட்ட அரசு மூலம் தடையில்லாச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது.

“வீடியோ தியேட்டர் தொடங்குவதற்கான லைசென்சை மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் சென்னையில் போலீஸ் கமிஷனரும் வழங்குவார்கள்”.

## அரசு ஆணைக்கு விளக்கம்

அரசுப் பணியில் புதிய நியமனம் குறித்து 27.12.93-ல் வெளியிடப்பட்ட அரசு ஆணை குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களின் விளக்கம்:

“தமிழக அரசுப் பணியில் புதிதாக நியமனம் கூடாது என்ற அரசின் ஆணை சிக்கன நடவடிக்கை காரணமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு நிரந்தரம் அல்ல; தற்காலிகமானதுதான். இதன் காரணமாகப் பதவி உயர்வு சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையும் எழாது. முறைப்படி பதவி உயர்வுகள் அளிக்கப்படும்.

“சிக்கன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு மாநில அரசுகளும் மத்திய அரசும் ஆளாகி உள்ளன. நிர்வாக செலவைக் குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதன்மூலம் கூடுதல் செலவைக் குறைக்க முடியும். மாநில அரசின் பொருளாதாரத்தைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

இதேபோல், ஆந்திர அரசும் நடவடிக்கை எடுக்கும் நிலைக்கு வந்திருக்கிறது”.

## சமய நிறுவனச் சட்டம்

தமிழ்நாட்டில் உள்ள சமய நிறுவனங்களில் அறங்காவலர்களாகவோ, அறங்காவல் குழு உறுப்பினராகவோ இருப்பதற்கு அயல்நாட்டுப் பிரஜைகள் தகுதியற்றவர்கள் என அறிவிக்க வகை செய்யும் திருத்தச் சட்ட முன் வடிவு, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. வெ. நடேசன் பால்ராஜ் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது.

## இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றம் (1.1.94)

அரசு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிலையங்களில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வகை செய்திடும் மசோதா- வாக்கெடுப்பின் பின், ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்துப் பேசுகையில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டதாவது: “சமூக நீதியை நிலைநாட்ட முதல்வர் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், அனைவரது ஆலோசனையையும் கேட்டு, தலைமை வழக்கறிஞரின் ஆலோசனையையும் கேட்டு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெறுவதற்காக 21-பி பிரிவின்கீழ் சட்டம் நிறைவேற்றப்படுகிறது”.

## தொழில்வரி: புதிய சட்டத் திருத்தம் (31)

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி அவர்கள்- தொழில் வரிவிகிதத்தைக் குறைப்பது, தொழில் வரி செலுத்தாத இனங்கள் சிலவற்றில் அபராதத் தொகைகளைக் குறைப்பது, ரத்து செய்வது ஆகியவற்றுக்கு வழிவகுக்கும் திருத்தச் சட்ட முன்வடிவைத் தாக்கல் செய்தார்.

## மருத்துவமனைகளும் மருந்தும்

மருத்துவமனைகள் பற்றி எழுப்பப்பட்ட வினாக்களுக்கு, அவ்வப்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் அளித்த பதில்களின் விவரமாவது:

“அரசு மருத்துவமனைகளில் உயிர் காக்கும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இல்லை. எல்லா மருத்துவமனைகளிலும் உயிர்காக்கும் மருந்துகள் கிடைக்கின்றன”.

“சில ஆண்டுகளுக்கு முன்புவரை உயிர்காக்கும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இருந்தது. கடந்த இரண்டாண்டுகளில் அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. தேவையான மருந்துகள் இருப்பதால், புகார் எதுவும் வரவில்லை”.

## பஸ்களில் போஸ்டர் ஒட்டக்கூடாது! (3.1.94)

தமிழ்நாட்டில், அரசு பஸ்களில்

## டங்கல் அறிக்கை:

# மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதம்

'காட்' (GATT) என்ற சர்வதேச வர்த்தக உடன்பாட்டு அமைப்பினால் கொண்டு வரப் பட்டுள்ள உலக நாடுகளுக்கு இடையேயான 'டங்கல்' உடன்படிக்கையை இந்தியா முழுமையாக ஏற்றுக்கொள்வதால், இந்தியப் பொருளாதாரத் திற்கு ஏற்படும் பின் விளைவுகள் குறித்தும், ஒப்பந்தத்திலுள்ள சில ஷரத்துக்களினால் நமக்குத் தீமைகள் ஏற்படாமல் தடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்குக் கடிதம் எழுதி உள்ளார்.

தனது கடிதத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'காட்' (GATT) அமைப்பினால் கொண்டு வரப்பட்டுள்ள சர்வதேச வர்த்தக உடன்படிக்கை யான 'டங்கல்' அறிக்கையில், குறிப்பாக இந்தியா வின் வேளாண்மைத்துறை தொடர்பான கொள் கைகள் மற்றும் திட்டங்கள் மீதான பிரிவுகளை நடைமுறைப்படுத்தினால் ஏற்படும் விளைவு களைக் குறித்து மத்திய அரசு அனைத்து மாநில அரசுகளுடனும் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளார். அதுமட்டுமின்றி இந்தியா, டங்கல் அறிக்கையை முழுமையாக ஒப்புக் கொள்வதனால், இந்தியப் பொருளா தாரம், ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகம் ஆகிய வற்றில் பாதிப்புகள் ஏற்படாது என மத்திய அரசு தனது எதிர்பார்ப்புகளைத் தெரிவித்து வந்தாலும், மாநிலங்களின் கூட்டத்தைக் கூட்டி முழுமையான முறையில் அதன்பின் விளைவுகளை விவாதித்து மாநில அரசுகளுக்கு எழுந்துள்ள ஐயங்களைப் போக்க மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டு மென்றும் அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடை செய்யும் சட்டம், சட்டப் பேரவையில் மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர் களால் தாக்கல் செய்யப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

'தமிழக அரசு போக்குவரத்துக் கழகங் களால் இயக்கப்படும் சாலைப் போக்கு வரத்துப் பணிகளுக்காகப் பயன்படுத்தப் படும் வாகனங்கள்மீது அனைத்து வகை போஸ்டர்களை ஒட்டும் செயல் பெருகி யுள்ளது. இது அந்த மோட்டார் வாகனங் களின் தோற்றத்தையே கெடுக்கிறது.

'மேலும், இத்தகைய வாகனங்களில் போஸ்டர்களை ஒட்டுவது, தொற்று நோயைத் தோற்றுவிக்கும் ஒரு நச்சுக் கிருமிபோலப் பரவி வருகிறது. இதைத் தடுத்து நிறுத்தும் வகையில் இத்தகைய மோட்டார் வாகனங்களின்மீது போஸ்டர் களை ஒட்டுவதைத் தடைசெய்ய அரசு முடிவு செய்துள்ளது.

'இந்த முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க இந்த மசோதா விழைகிறது. இந்தச் சட்டத்தை மீறி, போக்குவரத்துக் கழக பஸ்களில் போஸ்டர்களை ஒட்டு பவர்களுக்கு ஓராண்டு வரையில் ஜெயில் தண்டனை அல்லது 5 ஆயிரம் ரூபாய் அபராதம்- அல்லது இரண்டுமே விதிக் கப்படும்.'

## பிச்சைக்காரர் ஒழிப்பு: அரசு திருத்தம்

பிச்சைக்காரர் தடைச் சட்டத்தின் கீழ் வித்தை காட்டுவோர், பாணர்கள், செப்படி வித்தைக்காரர்கள், தெரு மந்திரவாதிகள் போன்ற மரபு வழி தெருக் கலைஞர்களைக் கைது செய் வதைத் தடுக்க, பிச்சைக்காரர் ஒழிப்புச் சட்டத்தில் தமிழக அரசு திருத்தம் கொண்டு வந்தது.

இது தொடர்பாக மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி இந்திர குமாரி அவர்கள், ஒரு மசோதாவைத் தாக்கல் செய்தார்.

## குழந்தைகள் கொலை தடுப்பு:

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் எடுத்த நடவடிக்கையால் குழந்தைகள் கொலை தடுக்கப்பட்டது பற்றி- மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. இந்திரகுமாரி அவர்கள் அறிவித்த சில கருத்துகள்:

"கடந்த ஓராண்டுக் காலத்தில், 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 17 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 2 புகார்கள் மீது விசாரணை நடந்து வருகிறது. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கைகளால், கடந்த 4 மாத காலமாகப் பெண் சிசுக்கொலை அடி யோடு தடுக்கப்பட்டுள்ளது. தொட்டில் களில் பெண் குழந்தைகளைக் கொண்டு வந்து போடுவதும் இப்போது இல்லை.

## குடும்பக் கட்டுப்பாடு

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில்-

"குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்ய மறுக்கும் டாக்டர்கள்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்" என்றார்.

## புயல்-மழை சேத விவரம்

1993-ஆம் ஆண்டு ஏற்பட்ட புயல்-மழைச் சேதம் விவரம் பற்றி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் இன்று சட்டப் பேரவையில் அறிக்கை வைத்தார்; அதில் குறிப்பிடப்பட்டிருந்ததன் சுருக்கம் வருமாறு:

'புயல் வெள்ளத்தில் சிக்கி 277 பேர் பலியாகி உள்ளனர். 1 இலட்சத்து 6

ஆயிரத்து 304 குடிசைகள் முழுவது மாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 4 இலட்சத்து 26 ஆயிரத்து 38 குடிசைகள் ஒரு பகுதி பாதிக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 5 இலட்சத்து 32 ஆயிரத்து 342 குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு மொத்தம் 15 கோடியே 69 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய்க்கான நிவாரணம் வழங்கப் பட்டுள்ளது...

'தென்னார்க்காடு வள்ளலார், தஞ்சாவூர், நாகை காயிதேமில்லத் ஆகிய காவிரி டெல்டாப் பகுதிகளில் உள்ள நெற்பயிர்கள் மிகுதியாக நாசமடைந்தன...

'மதுரை, திண்டுக்கல்-அண்ணா, தஞ்சாவூர் மாவட்டங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன...

'கடந்த சில ஆண்டுகளில் 1993-ஆம் ஆண்டில்தான் தமிழ்நாடு வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும், எந்த நிலையிலும் தொய்வு ஏற்படாமல் நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில், பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதால், பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு விரைவாகத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.'

இவ்வாறெல்லாம் குறிப்பிட்ட மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்- வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ரூ.666 கோடி மத்திய நிதி உதவி கோரி மாநில அரசின் சார்பில் விரிவான அறிக்கை அளிக்கப்பட்டிருப்பதையும் தம் உரையிடையே குறிப்பிட்டார்.

## பஸ்களில் சுவரொட்டி: சட்ட நிறைவேற்றம் 4.1.94

பஸ்களில் சுவரொட்டி ஒட்டினால் தண்டனை விதிக்க வகைசெய்யும் சட்டம் சட்டப்பேரவையில் நிறைவேறியது. இதையொட்டி, மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் பேசியதாவது:

''பஸ்களில் சுவரொட்டி ஒட்டுவதால் பஸ்சின் நிறம் மங்கி விடுகிறது. இதனால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு 2½ கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. மேலும் பல தொற்று நோய்க் கிருமிகள் உண்டாகின்றன. இதன் காரணமாகவே இந்தச் சட்ட மசோதா நிறைவேற்றப்படுகிறது. இதன்படி பஸ்களில் சுவரொட்டி ஒட்டினால் ஓராண்டு சிறைத் தண்டனை அல்லது ஐயாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்''.

## பொங்குக பொங்கல்!

பொங்கற் புதுநாள் போந்தது போந்தது
எங்கணும் எவர்க்கும் இன்பமே எய்துக
பொங்குக பொங்கல், பொங்குக பொங்கல்
பொங்குக பொங்குக பொங்குக பாலும்!

—பேராசிரியர் கா. நமச்சிவாயர்

## கூட்டுறவு சங்கத் தேர்தல்

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:

''மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைப்படி, ரேஷன் கடை சிப்பந்திகளுக்கு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து ரூ.150 சம்பளம் உயர்த்தப்படுகிறது. கூட்டுறவு சங்கத் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் மேலும் 6 மாத காலம் நீடிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. நீதிமன்ற வழக்கு விரைவில் முடிந்துவிடும் என நம்புகிறோம். அதன்பிறகு கூட்டுறவு சங்கத் தேர்தல் நடத்தப்படும்.''

## பல்கலைக்கழக வேந்தர் பொறுப்பு

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள் தாக்கல் செய்த- 1994-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மசோதாவில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

'தமிழ்நாடு முதலமைச்சர் சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வேந்தராக இருந்து வருவார். அவர், தமது பதவியின் காரணமாகப் பல்கலைக் கழகத் தலைவராகவும், கல்வி ஆட்சிப் பேரவையின் தலைவராகவும் இருப்பார். கல்வி ஆட்சிப் பேரவையின் கூட்டங்களுக்கு வந்திருக்கும் போது தலைமை வகிப்பார்.

'பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவுக்கு வந்திருக்கும்போது அதற்குத் தலைமை வகித்துப் பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புகளைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களுக்கு அவற்றை வழங்குவார்.

கல்வியமைச்சர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராக இருப்பார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராக அதன் நிறுவனர் இருப்பார்.

'சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனம் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட 3 பெயர்களைக் கொண்ட பெயர்ப் பட்டியலில் இருந்து வேந்தரால் நியமனம் செய்யப்படும்.

'அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தமட்டில் துணைவேந்தரின் நியமனம் நிறுவனரால் பரிந்துரை செய்யப்படும்.'

—1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் மசோதாவில் கூறப்பட்டிருந்ததாவது:

'தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் முதலமைச்சர் வேந்தராக இருப்பார்.

'தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக இணைவேந்தராக வேளாண்மைத் துறை அமைச்சரும், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக இணைவேந்தராக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக் கழக இணைவேந்தராகக் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சரும் இருப்பார்கள்.

'மற்ற பல்கலைக் கழகங்களின் இணைவேந்தராகக் கல்வி அமைச்சர் இருப்பார்.

## நிலவரி தண்ணீர் தீர்வை ரத்து

தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி, தண்ணீர் தீர்வை ஆகியவற்றை ரத்து செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு செய்திருப்பதாக, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

## ஆபாச சுவரொட்டி: நடவடிக்கை (5.1.94)

''ஆபாசச் சுவரொட்டிகளும், பெண்களை இழிவுபடுத்தும் முறையில் செய்யப்படும் விளம்பரங்களும் அரசினால் தடை செய்யப்பட்டவைகளாகும். இத்தகைய குற்றங்கள் பெருகாதவண்ணம் கட்டுப்படுத்துவதற்குக் காவல்துறை தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது'' என்று மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

**தொகுப்பு: பி.எல்.ஆர்.**




# பெண்மையும் ஆண்மையும் வெல்க என்றது தைத் திருநாள்

வெண்பனி போர்த்திய குன்றுகள்
உச்சி சோம்பல் முறிக்கிறது
விண்வரை ஓங்கிய பூமரம்
தன்எழிற் கையை அசைக்கிறது
பண்கள் படிக்கிற தீங்குயில்
எங்கோ பாடல் இசைக்கிறது
பலமொழி பேசும் பறவைகள்
கூட்டம் சிறகை விரிக்கிறது

வெண்ணிற அருவியின் மேனியில்
தண்ணிய ஆவி பறக்கிறது
விண்வெளி எல்லாம் பொன்னிற
ஞாயிறு தன்னை இறைக்கிறது
புன்னகை சிந்திடும் பூக்களின்
மார்பில் காதல் பிறக்கிறது
பூவையர் கண்களைப் போற்கரு
வண்டதில் வந்து சுவைக்கிறது

தைமகள் வந்தனள் என்று
மகிழ்ச்சியில் தரைமகள் ஆடுகிறாள்
தமிழ்மகள் கோயிலில் ஒளிமகள்
வந்தொரு தமிழ்மறை பாடுகிறாள்
ஐவகை நிலங்களில் வாழ்கிற
தமிழர்கள் வாழ்த்துகள் கூறுகிறார்
அருந்தமிழ்க் காப்பியப் புதுமைகள்
உண்டிட அறிஞர்கள் கூடுகிறார்

மஞ்சளும் இஞ்சியும் கொஞ்சிடும்
மனைகளில் மங்கலம் நிறைகிறது
மாடுகள் நெஞ்சிலும் 'பெரியவர்
நாமெ'னும் மமதை தெரிகிறது
வஞ்சியர் பொங்கிய பொங்கலின்
ஆசையில் வானவர் வருகின்றார்
வாழிய தமிழர் திருநாள்
என்றவர் வாழ்த்தி மகிழ்கின்றார்!

'உழவர்கள் மேலோர் உழைப்பவர்
மேலோர்' என்றது தைத்திருநாள்!
'உலகவர் யார்க்கும் தமிழ்த்தாய்
சொந்தம்' என்றது தைத்திருநாள்!
'அழகிய பெண்மையும் ஆண்மையும்
வெல்க!' என்றது தைத்திருநாள்!
அங்கம் முழுவதும் இன்பம்
நிரம்புக! என்றது தைத்திருநாள்

கவிஞர் இளந்தேவன்



# "இ.பி.கோ.வின் கீழ் தமிழகத்தில் நடைபெற்றுள்ள குற்றங்கள் பெரும்பாலான மாநிலங்களைவிடக் குறைவாகவே உள்ளன"

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதம்

1990-92-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆகிய இரு மாநிலங்களில்தான், பிடியாணையின்றிக் கைது செய்யப்படவேண்டிய குற்றங்களின் சராசரி அளவு அதிகமாக இருப்பதாக, மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் பதில் அளிக்கையில், மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு எஸ்.பி. சவான் அவர்கள் குறிப்பிட்டதாக 23.12.93 தேதியிட்ட சில நாளேடுகளில் செய்தி வெளியாகி உள்ளது. இந்தத் தகவல் தவறான ஒரு கருத்தை வெளிப்படுத்துவதாக இருப்பதால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மத்திய உள்துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில், மக்களவையில் அவர் சமர்ப்பித்த புள்ளி விவரங்கள், மற்ற மாநிலங்களைவிடத் தமிழகத்தில் தான் அதிகக் குற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்று, தமிழக மக்கள் தவறாகக் கருதி வெகுவாகக் குழம்புகின்ற அளவிற்கு அமைந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியக் குற்றவியல் தடுப்புச் சட்டத்தின் கீழ், தமிழகத்தில் நடைபெற்றுள்ள குற்றங்கள், பெரும்பாலான மாநிலங்களைவிடக் குறைவாகவே இருக்கும் பட்சத்தில், தேசிய குற்ற ஆவணங்கள் மையம் (National Crime Records Bureau) அளித்துள்ள, இந்தியக் குற்றவியல் தடுப்புச் சட்டத்தின் கீழும் சிறப்பு மற்றும் உள்ளூர்ச் சட்டங்களின் கீழும் நடைபெற்றதாகக் கூறும் குற்றங்கள் பற்றிய புள்ளி விவரத் தொகுப்பு, தமிழகத்தில் குற்றங்களின் நிலைமையைப்பற்றித் தவறான தகவல் தருவதாக உள்ளது. எனவே, இது குறித்து மக்களவைக்கும், மக்கள் தொடர்புச் சாதனங்களுக்கும் சரியான தகவலை அளிக்குமாறு மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக்கடிதத்துடன் மாநிலத்தில் நடைபெற்றுள்ள குற்றங்களின் எண்ணிக்கை பற்றிய குறிப்பையும் அனுப்பியுள்ளார். அந்த அறிக்கை பின் வருமாறு:

23.12.93 தேதியிட்ட சில நாளிதழ்களில் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு எஸ்.பி. சவான் அவர்கள், மக்களவையில் எழுத்து மூலம் பதில் அளிக்கையில் 1990-92-ஆம் ஆண்டுகளில் பிடியாணையின்றிக் கைது செய்ததற்குரிய குற்றங்களின் சராசரி அளவு நாட்டிலேயே தமிழகத்திலும், பாண்டிச்சேரியிலும்தான் அதிகம் எனக் குறிப்பிட்டுள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

இந்தியாவில் நடைபெறும் குற்றங்கள் பற்றிய புள்ளி விபரங்கள், தேசியக் குற்ற ஆவணங்கள் மையத்தால் (National Crime Records Bureau) தொகுக்கப்பட்டு ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்றன. 1991-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கைதான் இந்தப் பொருள் பற்றிய அண்மை அறிக்கையாகும்.

எனவே 1990-92-ஆம் ஆண்டின் நிலைமைகளைப் பற்றிய அறிக்கை தேசிய குற்ற ஆவணங்கள் மையத்தால் வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்



## பொங்கல் விழா!

உழவே தலை என்றுணர்ந்த தமிழர்
விழாவே இப் பொங்கல் விழாவாகும்! காணீர்
முழவு முழங்கிற்றுப் புதுநெல் அறுத்து
வழங்கும் உழவர்தோள் வாழ்த்துகின் றாரே!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்என்ற சொல்லிற்
பழுதுண்டோ? காணீர் பழந்தமிழர் "நாங்கள்
உழவரே" என்றுவிழா ஒப்பி மகிழ்ந்தாரே!

—பாவேந்தர் பாரதிதாசன்

படாத புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

1991-ஆம் ஆண்டைப் பொறுத்த மட்டில் தேசிய குற்ற ஆவணங்கள் மையம் வெளியிட்டு உள்ள அறிக்கையின்படி இந்தியக் குற்றவியல் தடுப்புச் சட்டத்தின் கீழும், சிறப்பு மற்றும் உள்ளூர்ச்சட்டங்களின் கீழும் நடைபெற்ற குற்றங் களைப் பற்றிய தகவல்கள் தனித்தனியாகத் தரப் பட்டுள்ளன. எனவே, அனைத்துப் புள்ளி விவரங் களையும் ஒன்றாகத் தொகுத்து, அதிலிருந்து பொது முடிவுகளை வகுப்பதென்பது தவறான செயலாகும். குற்றங்களின் எண்ணிக்கை நேரடி யாக மக்கள் தொகையுடன் தொடர்புள்ளதாகும். ஒரு சீரான மதிப்பீட்டிற்கு, மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, குற்றங்களின் அளவு "ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு ஏற்பட்டுள்ள குற்றங்களின் எண்ணிக்கை" என்று காட்டப்பட்டுள்ளது.

1991-ஆம் ஆண்டில் மாநிலங்கள், மத்திய நிர்வாகப் பகுதிகள் ஆகியவற்றில், இந்தியக் குற்றவியல் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடைபெற்ற குற்றங்களின் எண்ணிக்கையை அலசிப் பார்த்ததில், தமிழ்நாடு பதின்மூன்றாம் இடத்தில் இருக்கிறது.

தேசியக் குற்ற ஆவணங்கள் மையம் குற்றங் களின் எண்ணிக்கையையும், மக்கள் தொகை எண்ணிக்கையை இலட்சங்களிலும், குற்றங்களில் மாநிலங்கள் எத்தனையாவது இடத்தைப் பிடித் துள்ளன என்பதையும், வெளியிட்டுள்ளதைக்கீழே தந்துள்ளேன்.

| மாநிலங்கள் | மொத்த குற்றங்களின் எண்ணிக்கை | அரை ஆண்டு மக்கள் தொகை மதிப்பீடு (இலட்சங் களில்) | மொத்த குற்றங்களின் அளவு | குற்றங் களில் எத்தனை யாவது இடம். |
|---|---|---|---|---|
| கோவா | 3,805 | 11.7 | 324.4 | 4 |
| குஜராத் | 1,24,478 | 413.8 | 300.8 | 6 |
| கேரளா | 74,103 | 291.2 | 254.5 | 9 |
| மத்தியப் பிரதேசம் | 2,18,431 | 666.9 | 327.5 | 3 |
| மகாராஷ்டிரம் | 1,92,295 | 793.3 | 242.4 | 12 |
| மிசோரம் | 1,781 | 6.9 | 257.7 | 7 |
| ராஜஸ்தான் | 1,13,617 | 441.8 | 257.2 | 8 |
| தமிழ்நாடு | 1,33,284 | 558.0 | 238.5 | 13 |

எனவே, மற்ற மாநிலங்களைவிடக் குற்றங் களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் மேலோங்கி இருக்கிறது என்று கூறுவது தவறாகும். இ.பி.கோ. வழக்குகளைப் பொறுத்தமட்டில் 1991-ஆம் ஆண்டிலிருந்து, 1992-ஆம் ஆண்டு மாறு பட்டிருக்க வாய்ப்பில்லை, தேசிய குற்ற ஆவண மையத்தின் அறிக்கைப்படி 1991-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடைபெற்றதாகக் குறிப்பிட்ட குற்றங்களை ஆராய்ந்து பார்த்தாலும், மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலத்தில் நிலமை மிகவும் திருப்திகரமாக உள்ளது என்றே சொல்ல லாம். கொலைகளைப் பொறுத்த மட்டில், உத்திரப்பிரதேசத்தில் 9,994 கொலைகளும், பீகாரில் 4,430 கொலைகளும், மத்தியப் பிர தேசத்தில் 3,415 கொலைகளும், மகாராஷ்டி ரத்தில் 3044 கொலைகளும், ஆந்திரப்பிரதேசத் தில் 2,794 கொலைகளும் பதிவான நேரத்தில் தமிழ்நாட்டில் 1,650 கொலைகளே பதிவாகி உள்ளன.

சென்னை மாநகரில் 81 கொலைகளும் பம்பாயில் 473 கொலைகளும், டெல்லியில் 417 கொலைகளும், ஐதராபாத்தில் 170 கொலை களும், நாக்பூரில் 143 கொலைகளும் 1991-ஆம் ஆண்டில் பதிவாகி உள்ளன. கொள்ளைகளைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் 116 வழக்கு களும், உத்திரப்பிரதேசத்தில் 2,353-ம், பீகாரில் 3,182-ம், மகாராஷ்டிரத்தில் 884-ம், குஜராத் தில் 455-ம் கர்நாடகாவில் 337-ம் நடைபெற்று உள்ளன.

இந்தியக் குற்றவியல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் கொலை, ஆள்கடத்தல், கொள்ளை, கதவுடைப்பு, திருட்டு போன்ற பிடியாணை யின்றிக் கைது செய்வதற்குரிய குற்றங்கள் ஒவ்வொன்றைப் பொறுத்த வரையிலும் மற்ற மாநிலங்களைவிட, தமிழ்நாட்டின் நிலை மிகச் சிறந்ததாகவே உள்ளது. மக்களவையில் கொடுக் கப்பட்ட பதிலில் இந்த நிலை தெளிவாக விளக்கப் படவில்லை.

உள்ளூர் மற்றும் சிறப்புச் சட்டங்களின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட குற்றங்களைத் தேசிய குற்ற ஆவணங்கள் மையம் தனியாகப் பரிசீலிப்பதால் இவை பற்றிய போக்கின் ஆய்வு தனியே தரப் பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, புள்ளி விவரங்களைத் தொகுப்பதற்கு மதுவிலக்குச் சட்டம், சூதாட்டச் சட்டம், ஆயத்தீர்வைச் சட்டம், ஆயுதச் சட்டம், இந்திய ரயில்வே சட்டம், வெளி நாட்டினர் பதிவுச் சட்டம் என 15 குறிப்பிட்ட குற்றப் பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த அனைத்துச் சட்டங்களின் கீழும், தமிழ்நாடு காவல்துறை, குற்றவாளிகளின்மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

குறிப்பாக மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்குத் தமிழ்நாட்டில் அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. அனைத் துக் காவல் நிலைய அலுவலர்களுக்கும் எல்லா வழக்குகளையும் பதிவு செய்து தேவையான நட வடிக்கைகளை எடுக்கக்கூடிய தாராளப் பதிவு முறை வழக்கத்தில் உள்ளது.

மதுவிலக்குச் சட்டத்தைக் கையாளும் சிறப்புக் காவல் பிரிவு, இச்சட்டத்தின் கீழ் அதிக வழக்கு களைப் பதிவு செய்துள்ளது. பல்வேறு சிறப்பு, உள்ளூர் சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் கூடுதலாக இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் இதன் எண்ணிக்கை 7,59,849 ஆகும். பல்வேறு சமுதாயச் சட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்த மாநிலக் காவல் துறையினர் அறிவுறுத்தப்பட்டிருப் பதே இதற்குக் காரணமாகும். காவல் துறையினர் திறமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின் றனர். உதாரணமாக, மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் 2,71,231 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதே சட்டத்தின் கீழும், இதேபோல் மற்ற சமு தாயச் சட்டங்களின் கீழும் மற்ற மாநிலங்களின் புள்ளி விபரங்களைப் பார்த்தால், தமிழ்நாடு காவல் துறையினர் தீவிரமாக அமல்படுத்தி வருவது தெளிவாகப் புலப்படும். தமிழ்நாட்டில் குறிக்கோளுடன்தான் இது அமல்படுத்தப்படு கிறது. குறிப்பிட்ட சமுதாயக் குறிக்கோள்களை அடையும் நோக்கத்துடன்தான் அமல்படுத்தப்படு கிறது. *எனவே, பல்வேறு சமுதாயச் சட்டங்களை அமல்படுத்துவதோடு தொடர்புடைய குற்றங் களின் எண்ணிக்கைகளை கிரிமினல் குற்றங் களின் எண்ணிக்கையோடு சேர்த்துவிடக்கூடாது.*

சிறப்பு மற்றும் மாநிலச் சட்டங்களின் கீழ் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை, இச்சட்டங் களைத் திறமையாக அமல் செய்வதில் மாநில அரசு தெளிவான குறிக்கோளுடன் உள்ளது என்பதையே காட்டும்.

மேற்கூறிய காரணங்களால் அனைத்து எண் ணிக்கைகளையும் ஒட்டு மொத்தமாகக் கூட்டிச் சொல்வது சரியாகாது - நியாயமும் ஆகாது!



## உழவர் திருநாள் உவகைத் திருநாள்!

பொங்கல் உழவர் விழா! தமிழர் திருநாள்! நம்பவொண்ணாப் புராணக் கருத்தினை நாட் டினர் மனதிலே மூட்டிடும் மற்றைய விழாக்கள் போலன்றி, உழைப்பின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் உன்னதமான விழா!

களத்திலே காணப்பட்ட பலன், வீட்டிலே புதுப்பானையிலே, பொங்கி வழியும் நாள் பொங்கல் விழா!

செந்நெல்லும் செங்கரும்பும் பச்சைக் காய்கறியும் பசும் பொன்னிறப் பண்டங்களும் வண்ணக் கோலமும், வாடா மலர்களும், மனை தோறும் குவிக்க, மக்கள் மனதிலே மகிழ்ச்சி யூட்டும் நன்னாள்!

மார்பிலே சந்தனம் மணக்கும் பொன்னாள்!<br>
கூந்தலிலே மலர்கள் மொய்க்கும் நாள்!<br>
ஆடல், பாடல், கொட்டு முழக்கு, குதூகலம் வந்தாடும் நாள்

பாடுபட்ட உழவன் தன் வீட்டுப் பானையில், தான் உழைத்ததில் சிறிதளவு பலனாவது சேர் வதைக் காணும் நாள்!

—பேரறிஞர் அண்ணா

இந்தியக் குற்றவியல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் குற்றங்களின் எண்ணிக்கையை மட்டும் ஒப்பிட்டுப் பார்ப்பதே மிக முக்கியமாகும். ஏனெ னில், அது மட்டுமே ''உண்மையான குற்றங் களைப்'' பற்றிய சரியான தகவலைத் தரும்.

உள்ளூர்ச்சட்டம் மற்றும் சிறப்புச் சட்டத்தின் கீழ் அடங்கும் வழக்குகளைப் பொறுத்தவரை மாநில அரசின் கொள்கைகள், மற்றும் அமலாக் கம் செய்வதில் எதற்கு முன்னுரிமை அளிப்பது என்பதைப் பொறுத்தே நிலைமை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும். மாநிலச் சிறப்புச் சட்டங் களை அமல்படுத்துவதென்பது, மாநிலத்திற்கு மாநிலம் இயற்கையாகவே மாறுபடும். இந்தச் சட்டங்களின் கீழ் உள்ள குற்றங்களின் எண் ணிக்கையை, இ.பி.கோ. கீழ் வரும் குற்றங்களின் எண்ணிக்கையோடு, இணைப்பது பொருத்த மற்றது. அது உண்மையான குற்ற எண்ணிக்கை யைத் தராது.

### வெள்ள நிவாரணம்:

## வாழை பயிரிட்ட விவசாயிகளுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

**டி**சம்பர் ஆரம்ப நாட்களில் தமிழ்நாட்டில் வீசிய பெரும் புயலாலும், பின்னர் ஏற்பட்ட பெரு மழை, வெள்ளம் காரணமாகவும் பல மாவட்டங்களிலும் வாழைத் தோட்டங்கள் பெருமளவுக்குச் சேதம் அடைந்ததை அறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த வாழை பயிரிட்ட சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு (Small and Marginal Farmers) அவர்கள் பயனடையும் வகையில், எக்டேர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் மதிப்புடைய வேளாண் இடுபொருட்களை உடன் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். இதன்படி, முற்றிலும் சேதமுற்று 9000 எக்டேர் பரப்பில் வாழை பயிரிட்ட சிறு மற்றும் மிகச் சிறிய விவசாயிகள் பயனடையும் வகையில் 2.70 கோடி ரூபாய் மதிப்புள்ள மானியத்தோடு கூடிய வேளாண் இடுபொருட்களை உடன் வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

## ஒருங்கிணைந்த தென்னைச் சாகுபடித் திட்டம்:

*1993* நவம்பர்/டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளம்/புயல் சேதத்தின் காரணமாக தென்னார்க்காடு-வள்ளலார், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதேமில்லத் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஏறக்குறைய 35,750 தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன.

மேற்குறிப்பிட்ட ஐந்து மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்க உடனடியாக நிவாரணம் அளிக்கும் நோக்கத்துடனும், தென்னை வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த தென்னைச் சாகுபடித் திட்டத்தினை ரூ.79 இலட்சம் செலவில் 1993-94-இல் மேற்குறிப்பிட்ட ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், வெள்ளத்தினால் சாய்ந்த 20,000 தென்னை மரங்களை வெட்டி எடுத்து அப்புறப்படுத்த ஒரு மரத்திற்கு ரூ.200 மானியமாக வழங்கப்படும். இவ்வகையில் 1993 நவம்பர்-டிசம்பரில் வெள்ளம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட தென்னை வளர்க்கும் விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய ரூ.40 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.



## புதிய தென்னங்கன்றுகள் பயிரிட மானியம்!

*1993* அக்டோபர்-நவம்பர் மாதங்களில் ஏற்பட்ட புயல், கடும் மழை, பெரும் வெள்ளத்தினால் சேதமடைந்த தென்னை மரங்களுக்குப் பதிலாக புதிய தென்னங்கன்றுகள் வைத்துப் பயிரிடுவதற்காக விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்கும் புதிய திட்டத்தை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

தென்னை அபிவிருத்தி வாரியத்தின் உதவியுடன் அமல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் புயல்-மழையினால் பாதிக்கப்பட்ட தென்னார்க்காடு-வள்ளலார், சேலம், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களில் அழிந்துபோன 20,000 தென்னை மரங்களுக்குப் பதிலாகப் புதிய தென்னங்கன்றுகள் பயிரிட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

அழிந்துபோன ஒவ்வொரு தென்னை மரத்தையும் வெட்டி அப்புறப்படுத்துவதற்கும், மரம் ஒன்றுக்கு ரூ.200 வீதம் மானியம் வழங்கப்படும். இந்தத் தென்னை மரங்களுக்குப் பதிலாக நடப்படும் ஒவ்வொரு தென்னங்கன்றுக்கும் ரூ.5 வீதம் மானிய உதவி வழங்கப்படுவதுடன், தென்னங்கன்றுகளுக்கான உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கென ஒவ்வொரு மரத்துக்கும் ரூ.8 வீதம் மானிய உதவி வழங்கப்படும்.

உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து வாங்குவதற்கான மானிய உதவி புயல்-பெருமழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மட்டுமல்லாது, தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் உள்ள 4,37,500 தென்னை மரங்களுக்கும் வழங்கப்படும். மேலும், தென்னை பயிரிடும் விவசாயிகள் பலவகையான தென்னை வகைகளைப் பயிரிடுவதை ஊக்குவிப்பதற்காக எக்டேர் ஒன்றுக்கு ரூ.200 மானிய உதவி வழங்கப்படும்.

தமிழகத்திலுள்ள தென்னை விவசாயிகள் புயல், கடும் மழை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து, அவர்களுக்கு உதவும் பொருட்டு 79 இலட்சம் ரூபாய் செலவாகும், இத்திட்டத்தினை மாபுமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.



மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக நிர்வாகக் கட்டடத்திற்கான மாதிரி வடிவத்தினைத் தலைமைச் செயலகத்தில் பார்வையிட்டார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் அப்போது உடனிருந்தார் (4.1.'94).

அண்ணாமலைப் பல்கலைக்கழக வேந்தரும், பிரபல தொழிலதிபருமான டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள், அடுத்த மாதம் சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் நடைபெறவுள்ள சர்வதேச அழைப்புத் தடகளப் போட்டிகளை நடத்துவதற்காக, நன்கொடையாக ரூ.25 இலட்சத்திற்கான காசோலையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் நேரில் வழங்கினார் (5.1.'94).

# படமும் செய்தியும்





சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டுத் தூதர் திரு. அகிரா நாகசாகா, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார் (3.1.'94).

திரைப்பட நடிகர் திரு. பிரபு, தனது பிறந்தநாளையொட்டி முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.1 இலட்சத்திற்கான காசோலையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார் (5.1.'94)





மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சிறப்புப் பாதுகாப்புப்படைத் தொழில்நுட்பப் பிரிவு கண்டுபிடித்த 'ரிமோட் கண்ட்ரோல்' மூலம் இயங்கும் ஏ.கே.47 ரகத் துப்பாக்கியைத் தலைமைச் செயலகத்தில் பார்வையிட்டார். சிறப்புப் பாதுகாப்புப் படையின் டி.ஐ.ஜி. திரு. விஜயகுமார் உடனிருந்தார் (3.1.'94).

அண்மையில் காலமான திருக்குறள் நெறிபரப்பு மையத்தின் தலைவர் திருக்குறளார் திரு. வீ. முனிசாமி அவர்களின் உடல்மீது, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார் (4.1.'94).





அண்மையில் காலமான காவலர் திரு. எம். முத்துசுந்தர் ராஜா அவர்களின் மனைவி திருமதி. அனிலா ராணி அவர்களை, தமிழகக் காவல்துறை இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக உதவி யாளராகப் பணி நியமனம் செய்து, அதற்கான ஆணையை மாண்புமிகுமுதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், திருமதி அனிலா ராணியிடம் நேரில் வழங்கினார். உள்துறைச் செயலர் திரு. கே. மலைச்சாமி, காவல்துறைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால் ஆகியோர் உடனிருந்தனர் (5.1.'94).

பணியில் இருக்கும்போது மாரடைப்பால் மரணமடைந்த சென்னை மாநகரக் காவல்துறை உதவி ஆணையாளர் திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள் உடல்மீது மலர் வளையம் வைத்து, மாண்புமிகுமுதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அஞ்சலி செலுத்தினார்.






# கிராமப்புறக் கைவினைஞர்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட...

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தொடங்கப்பட்ட 1.4.1960-லிருந்து கடந்த 33 ஆண்டுகளாக, கிராமப் பகுதிகளிலுள்ள கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கதர் கிராமத் தொழில்கள் மூலமாக மேன்மை அடையச் செய்திட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

1991-92-ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி தமிழ்நாடு அகில இந்திய அளவில் கதர் உற்பத்தியில் உத்திரப் பிரதேசத்திற்கு அடுத்த இரண்டாவது இடத்தையும், கிராமத் தொழில் வளர்ச்சியில் மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசத்திற்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றது.

கதர் கிராமத் தொழில் திட்டங்கள் கீழ்க்காணும் மூன்று அடுக்கு முறையில் இவ்வாரியத்தினால் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. வாரியத்தின் அலகுகள் | ... | 1264 |
| 2. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் | ... | 1807 |
| 3. கைவினைஞர்களுக்குத் தனிநபர் நிதியுதவி | ... | 77043 |

இவ்வாரியத்தின் 1992-93-ஆம் ஆண்டின் சாதனைகளும், 1993-94-ஆம் ஆண்டிற்கான இலக்குகளும் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

| | 1992-93 | 1993-94 |
|---|---|---|
| | (ரூபாய் | கோடியில்) |
| **உற்பத்தி:** | | |
| அ. கதர் ரகங்கள் | 31.41 | 39.60 |
| ஆ. கிராமத் தொழில் பொருட்கள் | 298.71 | 330.00 |
| **விற்பனை:** | | |
| அ. கதர் ரகங்கள் | 28.35 | 38.50 |
| ஆ. கிராமத் தொழில் பொருட்கள் | 318.62 | 375.00 |

இதுவரை அளிக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்பு: 11.82 இலட்சம் மக்கள் இதில்

அ. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்: 2.58 இலட்சம் மக்கள்

ஆ. மகளிர்: 4.45. இலட்சம் மக்கள்

நடப்பு 1993-94-ஆம் ஆண்டில் இவ்வாரியம் ஒரு இலட்சம் நபர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு அளித் திடத் திட்டங்களைத் தீட்டி வருகிறது.

1993-94-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் புதிதாக 25 கதர் அங்காடிகள் திறக்கப்பட உள்ளன.

கதர்ப் பட்டு ரகங்களுக்கு மக்களிடம் ஏற்பட்டுள்ள நல்ல வரவேற்பை மனதில் கொண்டு, பட்டு உற்பத்தி இலக்கு ரூ.15 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் மற்றும் தீபாவளி பண்டிகைக் காலங்களில் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவும், தமிழ்நாடு அரசும் கதர் துணி விற்பனைக்குச் சிறப்புத் தள்ளுபடிகளை அளித்துள்ளன.

தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் கதர் ரகங்களுக்கு கீழ்க்கண்டவாறு மொத்த சிறப்புத் தள்ளுபடி இவ்வாண்டு அளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. கதர்-ஆயத்த ஆடைகள் | ... | 30 % |
| 2. பாலியஸ்டர் | ... | 20% |
| 3. பட்டு ரகங்கள் | ... | 20% |
| 4. உல்லன் | ... | 30 % |

மேற்காணும் சிறப்புத் தள்ளுபடி அண்ணல் காந்தி அடிகள் பிறந்த நாளான 2.10.93 முதல் 12.11.93 வரை தமிழகத்தில் உள்ள அனைத்துக் காதி கிராப்ட்களிலும் அளிக்கப்படுகிறது.

இவ்வாண்டு தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் கதர் விற்பனை இலக்கு ரூபாய் 34 கோடி அளவிற்கு நிர்ணயம் செய்துள்ளது. இதில் ரூபாய் 7 கோடிக்கு இக்குறளகம் கதர் அங்காடியில் மட்டும் விற்பனை செய்யப் படவுள்ளது.

கதர் ரகங்களும், கிராமத் தொழில் பொருட்களும் கிராமப்புறங்களிலுள்ள ஏழைக் கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தப் பொருட்களின் விலையில் பெரும்பகுதி அவற்றை உற்பத்தி செய்யும் கைவினைஞர்களுக்கு ஊதியமாக வழங்கப்படுகிறது.

கதர் கிராமத் தொழில் பொருட்கள் தரத்தில் உயர்ந்தவையாகவும், விலை நியாயமாகவும் உள்ளன. அவற்றிற்கு மக்களிடம் நல்ல வரவேற்பும் உள்ளது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான துணி வகைகளை ஒன்றிரண்டையாவது கதர் ரகங்களிலிருந்து வாங்கினால், இந்தத் தொழிலை நம்பி இருக்கும் கிராமப்புற ஏழைக்கைவினைஞர்களுக்கு இன்னும் பெரிய அளவில் தொடர்ந்து வேலை வாய்ப்பினை அளிக்க முடியும்.

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

**233, N.S.C. Bose Road, Madras-600 001.**

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# ஆக்கப் பணிகள் சிறந்துவரும்

# அலங்காநல்லூர் ஒன்றியம்!

மதுரை மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாமே, பல வகைகளிலும் மேம்பாடு கண்டிருக்கின்றன. அவை எல்லாவற்றையும் நேரில் போய்ப் பார்த்துத் தொகுத்து எழுதுவது சாத்தியமில்லை என்பதால்- அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சிப் பணிகளை மட்டுமே- ஒரு நாளை ஒதுக்கிப் போய்ப் பார்த்தோம்.

160.26 ச.கிலோமீட்டர் பரப்பளவுள்ள இந்த ஒன்றியத்தின் மொத்த மக்கள் தொகை 81,178 ஆகும். இதன் கட்டுப்பாட்டில் உள்ள ஊராட்சிகளோ 36. பேரூராட்சிகளோ 2.

47 வருவாய்க் கிராமங்களைக் கொண்டிருக்கும் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில்- 3 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 4 நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், 14 கூட்டுறவு சொசைட்டிகள், 2 வேளாண் கிடங்குகள், 2 கால்நடை மருத்துவ நிலையங்கள் ஆகியவைகளும் இருக்கின்றன.

1992-93-ஆம் ஆண்டில், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் தலா ரூ.1,20,000 மதிப்பீட்டில்- அலங்காநல்லூர், குட்டிமேய்க்கிப்பட்டி, டி.மேட்டுப்பட்டி, சேந்தமங்கலம், பாலமேடு ஆகிய இடங்களில்- மொத்தம் ரூ.6,00,000 மதிப்பீட்டில் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

1992-93-ஆம் ஆண்டுக்கான மொத்த ஒதுக்கீடாக அனுமதிக்கப்பட்ட ரூ.29.55 இலட்சத்தில்- அனைத்து வேலைகளும் இந்த ஊராட்சி ஒன்றியத்தில் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

அ.புதுப்பட்டியில் கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம், பாலமேட்டில் கட்டப்பட்டுள்ள புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையம், சத்துணவு மையங்களுக்கான சமையல்



அறைக் கட்டடங்கள், 24 ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகள், 5.3 கிலோ மீட்டர் தூரத்திற்கான தார்ச் சாலைகள் அமைப்பு, 6 கல்வர்ட்- தடுப்புச் சுவர்கள், ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கான இணைப்புச் சாலைகள், ஆதிதிராவிடர் மயானங்களுக்கான சாலைகள், பள்ளிகளுக்கான 10 கழிப்பிடங்கள் ஆகியவை இதிலடங்கும்.

**கல்விக் கூடங்கள்**

1993-94-ஆம் ஆண்டில், 9 ஊராட்சிகளுக்காகக் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் ரூ.10,80,000 மதிப்பீட்டில் கட்ட அனுமதிக்கப்பட்டதில் ஒரே ஒரு கட்டடம்தான் பாக்கியிருக்கிறது; மீதமெல்லாம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

ரூ.6,14,400 திட்ட மதிப்பீட்டில் 32 ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

5 ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடங்கள் ரூ.4,35,000 மதிப்பீட்டுத் தொகையில் கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றன.

ரூ.36 ஆயிரத்தில் இரண்டு பேருந்து நிழற்குடைகளும், ரூ.30



ஆயிரத்தில் இரண்டு பம்ப் அறைகளும், ரூ.1,98,000-ல் ஊட்டச் சத்துணவு மையக் கட்டடம் இரண்டும், ரூ.6,00,000-ல் சிறுபாலங்கள் 6-ம், 4.4 கி.மீ. தார்ச்சாலையொன்று ரூ.5,53,200-லும் உரு



வாகி வருகின்றன.

ஊராட்சிப் பங்குத் தொகையோடு 9 வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளது; இதற்காக ரூ.5,71,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

1993-94-ஆம் ஆண்டிற்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்காக ரூ.41,17,600 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**செயற்கை வைரம்**

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியக் கட்டடத்திற்கு அருகிலேயே 'அந்தோதயா' என்கிற- செயற்கை வைரம் பட்டை தீட்டும் நிலையம் ஒன்று உள்ளது.



51 பெண்கள் பணியாற்றி வருகிறார்கள்; பெரும்பாலானோர் ஆதி திராவிடர்களே. திருச்சியிலிருந்து செயற்கை வைரங்கள் இங்கே பட்டை தீட்ட அனுப்பப்படுகின்றன.

இங்கே வேலைபார்த்து வரும் பெண்களுக்கு, ஒரு மாதத்திற்கு ரூ.1,500 வரை- வேலைக்கேற்ப ஊதியம் கிடைக்கிறது.

**பெரியகங்கை**

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக முகப்பில்- அந்தப் பகுதியைச் சேர்ந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் பற்றிய விளம்பரப் பலகையொன்று வைத்திருக்கிறார்கள்.

அந்தப் பட்டியலில் உள்ள திரு. பி. பெரியகங்கை என்ற 68 வயது பெரியவரைச் சந்தித்தோம் நாம்.



தியாகிகளுக்கான மத்திய அரசு ஓய்வூதியம் ரூ.1,000/-, மாநில அரசு ஓய்வூதியம் ரூ.265/- பெற்று வருகிறார், இவர். 1940-ல் காந்தியார் சொற்படி வினோபாபாவே தலைமையில் நடந்த தனிநபர் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்த பெருமை இவருடையது. 'டில்லி மார்ச்' என்ற காந்தியடிகளின் ஆணையைச் சிரமேற்கொண்டு- அலங்காநல்லூரிலிருந்து சென்னை வரை சுமார் இரண்டு மாதகாலம் நடந்தே சென்று சாதனை படைத்த தியாகி இவர். 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்திலும் ஈடுபட்டிருக்கிறார்.

இவரோடு- ஆர்.எஸ். பெருமாள், மு. பழனிச்சாமி, பெருமாள் கவுண்டர் போன்றோரும் விடுதலைப் போரில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர் சிறையிலிருந்தபோது- திரு. எம்.பக்தவத்சலம், திரு. ஆர். வெங்கட்ராமன், திரு. என்.எம்.ஆர். சுப்பராமன், திரு. ஓ.வி. அளகேசன் ஆகியோரும் உடனிருந்திருக்கிறார்கள்.

காந்தியடிகள் மதுரை வந்திருந்த போது ஊழியர் கூட்டத்தில் நேரில் பார்த்திருக்கிறேனே தவிர, நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று கூறும் இவர், மூன்று மாத காலம் அப்போது சிறைவாசம் அனுபவித்திருக்கிறார்.

**சீமான்துரை**

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் மூலம்- ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், பல பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

சிறுதொழில் தொடங்குவதற்காக ரூ.5,400/- வீதம் கடன் தரப்பட்டிருக்கிறது. அப்படிக் கடன்பெற்றவர்களில் ஒருவர் சீமான் துரை என்கிற நரிக்குறவர்.



மதுரை, திருச்சி, சென்னை போன்ற ஊர்களுக்கெல்லாம் போய்- பாசி, பச்சை, பவழம் போன்றவை வாங்கி வந்து அழகு படக் கோத்து ஊர்ஊராகச் சென்று வியாபாரம் செய்து வருவது இவர் தொழில்.

இப்படிப்பட்ட குடும்பங்கள் 31 இந்த அலங்காநல்லூர் வட்டாரத்தில் உள்ளன.

''மாதந்தோறும் இவர்களிடமிருந்து குறிப்பிட்ட தொகை மிகச் சரியாகத் திருப்பிச் செலுத்தப்படுகிறது'' என்கிறார் அலங்காநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலரான திரு. கே. முகமது கலீல்கான்.

**—பி.எல்.ஆர்**






திருநெல்வேலி மாவட்ட நூலக ஆணைக்குழு 18.9.1950-இல் ஏற்படுத்தப்பட்டது. இம்மாவட்டத்தின் மைய நூலகம் 1952-இல் தொடங்கப்பட்டது.

முதலில் ஜூலை 90 வரை, தற்போதைய சிதம்பரனார் மாவட்டமும் சேர்ந்து ஒருங்கிணைந்த மாவட்டமாகச் செயல்பட்டு வந்தது. ஜூலை 90-இல் சிதம்பரனார் மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர், இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவில் மைய நூலகம் ஒன்றும், 90 கிளை நூலகங்களும், 65 வழங்குமுனை நூலகங்களும் இன்று செயல்பட்டு வருகின்றன. பெண்களுக்கான ஒரு நூலகம் பெருமாள்புரத்திலும், சிறுவர்களுக்கான நூலகம் ஒன்று பாளையங்கோட்டையிலும் செயல்படுகிறது. வீடுகளுக்கு நூல்கள் வழங்க ஒரு இயங்கு நூலகமும் செயல்பட்டு வருகின்றது.

1.4.93-இல் மொத்த நூல்கள் இருப்பு 6,67,044 இதே ஆண்டில், மொத்த உறுப்பினர்கள் 97,765, ஆண்டு வாசகர் வருகை 21,20,418, ஆண்டு இரவல் நூல் வழங்கல் 4,21,912, ஆண்டு நூல்கள் ஆலோசனை 1,75,056. சொந்தக் கட்டடங்கள் 20, வாடகைக் கட்டடங்கள் 48 உள்ளன.

மாவட்ட மைய நூலகம் ஒன்றும் மற்றும் 20 கிளை நூலகக் கட்டடம் கட்டவும் மனைகள் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதில் இதுவரை, மாவட்ட மைய நூலகம் ஒன்றும், பாப்பாகுடி, சிங்கம்பட்டி, பழவூர், லெவிஞ்சிபுரம், இட்டமொழி, தென்மலை, இலஞ்சி, கீழப்பாவூர், கரைச்சுத்துபுதூர், புலியூர்குறிச்சி முக்கூடல், இராயகிரி, பேட்டை ஆகிய 14 இடங்களில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மாவட்டமைய நூலகக் கட்டடத்துடன் இணைந்து கட்டப்பட்டுள்ள மாடிக் கட்டடத்தில் இதுவரை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்த அலுவலகம் 21.4.93 முதல் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கட்டடமும் மற்றும் கட்டி முடிக்கப்பட்ட 13 கிளை நூலகங்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களாலும் மற்றும் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்களாலும் 20.3.93 அன்று திறந்து வைக்கப்பட்டன.

இம்மாவட்டத்தில், செயல்பட்டு வரும் திருநெல்வேலி நகர் முதல் நிலை நூலகம், திருநெல்வேலி சுழற் கழகத்தாலும், மேலகரம் கிளை நூலகம் காவல்துறைக் கண்காணிப்பாளர் அவர்களாலும் தத்து எடுக்கப்பட்டுள்ளது.

1989-ஆம் ஆண்டு மாவட்ட நூலக வளர்ச்சி மாநாடு நாங்குனேரியில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் நூலகங்களுக்கு ரூ.2.75 மதிப்பளவு தளவாடச் சாமான்கள் நன்கொடையாகக் கிடைத்தன. தமிழக அரசு பொது நூலகத் துறைக்கு நிர்ணயித்துள்ள 8 குறிக்கோள்களில், திருநெல்வேலி மாவட்டத்தில் கீழ்க்கண்ட சாதனைகள் முடிக்கப்பட்டுள்ளன.

**நூலகக் குறிக்கோள்கள்**

1. நூலகக் கட்டடம் கட்ட தனியார்
 அ) நிலம் பத்திரப் பதிவு மூலம் நன்கொடையாகப் பெற்றது 17
 ஆ) உள்ளாட்சி மனைப் பத்திரப் பதிவு மூலம் பெற்றது 23
2. நூலகங்களுக்கு நன்கொடையாகப் பெறப்பட்ட தளவாடச் சாமான்கள் மதிப்பு 3,14,857.50
3. நூலகங்களுக்கு நன்கொடையாகப் பெறப்பட்ட நூல்கள் 3,266.00
 பத்திரிகைகள் மதிப்பு 17,237.45
4. ரூ.1,000 நன்கொடையாக நிரந்தர வைப்பு நிதிக்குச் செலுத்தி, நூலகப் புரவலராகச் சேர்ந்தவர்கள் 237
5. படித்தவர்கள் அனைவரையும், நூலக உறுப்பினர்களாகச் சேர்க்கும் திட்டம் மூலம் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டவர்கள் 14,700
6. திறக்கப்பட்ட பகுதிநேர நூலகங்கள் 70
7. 2000-வது ஆண்டிற்குள் நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டி முடிக்க வேண்டும் என்ற திட்டத்தில் நூலகக் கட்டடம் 17
8. நூலகத்தை மக்கள் நலன் கருதித்தத்து எடுக்கப்பட்ட நூலகங்கள் 2

'நூலகம் இல்லா ஊரில்லை' என்ற நிலையை ஏற்படுத்த நூலகத் துறை முயற்சித்து வருகிறது. மக்கள் தொகை 5,000-க்கு மேல் உள்ள ஊர்களில் கிளை நூலகம் திறக்க ஊர்ப் பொதுமக்கள் கட்டடம் நன்கொடையாக வழங்கினால், முன்னுரிமை அளித்து நூலகம் திறக்கப்படும் அல்லது வாடகை இல்லாத கட்டடமும் 10 சென்ட் மனையும் நன்கொடையாக வழங்க வேண்டும். நூல்கள், தளவாடச் சாமான்கள் வாங்க ரூ.20,000 வழங்க வேண்டும்.

தமிழக அரசில் 1993-94 வரவு செலவுத் திட்டத்தில் 300 கிளை நூலகங்கள் திறக்க வகை செய்யப்பட்டுள்ளது.

பகுதிநேர நூலகம் திறக்க ஊர் மக்கள் 10 சென்ட் நன்கொடை வழங்கி, வாடகை இல்லாத கட்டடமும் ஒன்று வழங்க வேண்டும். குறைந்தது ரூ.2,000-க்குக் குறையாமல் தளவாடச் சாமான்கள் நன்கொடையாக வழங்க வேண்டும். முதலில் குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர வேண்டும். இந்த 4 அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தால், உடன் பகுதிநேர நூலகம் திறக்கப்படும்.

மக்கள் முன்னேற, நாடு முன்னேற, அறிவுச் செல்வம் பெறுக, ஆற்றல் வளர ஒவ்வொருவரும் நூலக உறுப்பினராக வேண்டும். தினமும், ஒரு நூல் படிக்க வேண்டும். நூலகத் தேவைக்கு நூல்கள், பத்திரிகைகள், தளவாடங்கள் வழங்க வேண்டும். நூலகப் புரவலராகச் சேர வேண்டும். ஊர்தோறும் நூலகம் திறக்க உதவ வேண்டும்.

## நல்ல தமிழ்ச் சொற்கள்

| | | |
|---|---|---|
| Courtesy Call,l | - | அன்புக் காணல் |
| Cousin | - | ஒன்றுவிட்ட உடன்தோன்றல் |
| Covered | - | கவரப்பட்ட |
| Crossing efficiency bar | - | திறன்வரை கடத்தல் |
| Cut service | - | குறைப்புச் சேவை |
| Death sentence | - | இறப்பு ஒறுப்பு |
| Decency and decorum | - | பண்பும் பாங்கும் |
| Delay | - | சுணக்கம், நெடுநீர்மை |
| Delegate | - | பேராளர் |
| Representative | - | சார்பாளர் |
| Deluxe | - | உயர்வகை |
| Deployment | - | பரவலமர்த்தம் |
| Dial tone | - | இயங்கொலி |
| Dictation | - | எழுதநவில்கை |
| Disposal | - | தீர்வு |
| Do's | - | செய்வன |
| Dont's | - | தவிர்வன |
| Draft | - | வரைவு, வரைவோலை |
| Ear-mark | - | வரைந்து வைத்தல் |
| Efficiency | - | திறப்பாடு |
| Enquiry Office | - | கேட்டறி நிலையம் |
| Epilepsy | - | வலிப்பு நோய் |
| Exception | - | புறனடை |
| Fall in | - | அகம் சேர் |
| Fall out | - | புறம் போ |
| False ceiling | - | ஒப்பனை மூட்டம் |
| Field inspection | - | களப்பணி ஆய்வு |
| Filter coffee | - | வடித்த காநீர் |
| Flagging | - | குறியீடு அமைத்தல் |
| Flash-back | - | மீள் காட்சி |
| Flat | - | இணைந்த இல்லம் |
| Foot-board | - | மிதிப்படி |
| Fund | - | நிதியம் |
| Finance | - | நிதி |

நன்றி: ஆட்சிமொழி அருஞ்சொற்கள்



# வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கல்வெட்டுக்கள் கண்டுபிடிப்பு!

தமிழ்நாடு அரசு தொல்பொருளாய்வுத்துறை, அண்மையில் வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் கூட நகரத்தில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மூன்று கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்துள்ளது.

முதல் கல்வெட்டு திக்கம்மா கோயிலுக்கு அருகே நிறுத்தப்பட்டுள்ள ஒரு பலகைக் கல்லிலும், இரண்டாம் கல்வெட்டு வள்ளியம்மாள் என்பவரின் நிலத்திற்கு அருகேயும், மூன்றாவது துண்டுக் கல்வெட்டு இரண்டாம் கல்வெட்டிற்கு அருகேயும் உள்ளன. மூன்று கல்வெட்டு களும் தமிழ்க் கல்வெட்டுகளே.

முழுமையாகக் கிடைத்துள்ள இரண்டு கல்வெட்டு களுள் ஒன்று சகம் 825 (கி.பி.903)ச் சார்ந்த மாவலி வாணராயன் காலத்தது. கூடநகரிலுள்ள ஏரியினைப் பராமரிப்பதற்காகக் கங்கர் சிறு மாரையன் என்பான் நிலத்தைத் தானமாகக் கொடுத்துள்ளான் என்பதையும், தன் தமையன் மாவலிவரையன் விசையித்தையனின் ஆட்சிக் காலத்தில் இவன் அடையாறு நாட்டை ஆண்டுள்ளான் என்பதையும் இக்கல்வெட்டால் அறி கிறோம்.

இரண்டாம் கல்வெட்டு நடுகற்கல்வெட்டு, கூடநகரில் வாழ்ந்த நிருநபன் அணுக்கன் என்பான் அவ்வூர் ஆநிரைகளை மீட்பதற்காகச் செய்த போரில் இறந்து பட்டதைத் தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டு கோப்பர கேசரி பன்மரின் 14-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்தது. இம்மன்னன் விஜயாலயன் அல்லது பராந்தகனாக இருக்கலாம். இக்கல்வெட்டு வீரன் ஒருவனின் உருவத் துக்கு முப்புறங்களிலும் ஏழுதப்பட்டிருக்கிறது. அம் பெய்யக் குறிபார்த்து நிற்கும் வீரனுடைய உருவம் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளது. தலைப்பாகை சிறப் பாகக் காணப்படுகிறது. வீரனின் இடையில் குறுவாள் ஒன்று செருகப்பட்டுள்ளது. தொடைவரை உள்ள சிற்றாடை காணப்படுகிறது. வீரனின், இந்த உருவ அமைப்பைக் கொண்டும், இக்கல்வெட்டு கி.பி.9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கொள்ளலாம்.

வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் அக்கால அரசியல் சமூக நிலைகளை எடுத்துக் காட்டுவதாக உள்ளதால் இவ்விரண்டு கல்வெட்டுகளும் முக்கியத்துவம் பெற்றதாக அமைகிறது.

கூட நகரம் திருமதி. வள்ளியம்மாள் கொடுத்த தகவலின் பேரில் திரு. ஜி. அர்ச்சுனன், கல்வெட்டாய் வாளர்; திரு. மே. சீனிவாசன், இளநிலைக் கல்வெட்டாய் வாளர், திரு. ப. முருகேசன், கல்வெட்டுச் சிற்றெழுத்தர் ஆகியோர் இக்கல்வெட்டைப் படியெடுத்து வந்தனர்.

—நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

# கரும்பின் கதை!

உலகிலேயே பிரேசிலுக்கு அடுத்த படியாக இந்தியாவில் தான் கரும்பு சாகுபடியின் நிலப்பரப்பு அதிகம். அதே சமயம் பிரேசிலில் உற்பத்தியாகும் கரும்பு அதிக அளவில் சர்க்கரைத் தொழிலுக்குச் செல்லாமல் நேரிடையாகவே ஆல்க ஹால் தொழிற்சாலைக்குச் சென்று விடுவதால், உலகில் சர்க்கரை உற்பத்தியிலும், நாட்டுச் சர்க்கரை உற்பத்தியிலும், மொலாசஸ் உற்பத்தியிலும் இந்தியாவே முதலிடம் வகித்து வருகிறது.

ஒரு பொருள் அது தோன்றிய இடத்தைவிட புகுந்த இடத்தில் தான் சிறப்புறுகிறது. கரும்பு-சர்க்கரை விஷயமும் அப்படியே. கரும்பி லிருந்து சர்க்கரை தயாரிக்கும் தொழில்நுட்பத்தை உலகுக்கு வழங் கியது இந்தியாவே.

''நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா'', வால்யூம் 17, பக்கம் 769, வழங்கும் சாரம்சம்: ''கி.மு. 3000 ஆண்டிலிருந்து இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி நிகழ்ந்து வந்ததை அறியலாம். சர்க்கரையைக் குறிக்கும் இந்தியச் சொல் ''காரா'' (Guara) பழமை யானது. ''காரா''விலிருந்து வெல் லத்தைக் குறிக்கும் ''குர்'' என்ற சொல் பின்னர் திட்பமானது. ''காரா'' (கவுரா) என்று வங்காள முடிமன்னர் பெயரும் குறிக்கப் படுகிறது.

கி.மு. 800 அல்லது அதற்கும் முன்பாகவே மதிப்பிடத்தக்க ''அதர்வன வேதம்'' என்ற நூலில் கரும்பினால் உருப்பெற்ற கிரீடம் அல்லது மணிமுடி (Crown) குறிப் பிடப்படுகிறது. கி.மு. நான்காம் நூற்றாண்டில் இந்தியாவின் மீது படையெடுத்த மாமன்னர் அலெக் சாந்தரின் படைத்தளபதி நீர்க்கஸ் ''நாணல் பயிர் ஒன்று தேனீக்களின் உதவியில்லாமல் தேன் வழங்கு வதாக'' இக்கரும்பைக் குறிப்பிட்டுப் பேசியுள்ளான். ஆனால் முதலாவது கரும்புப் பயிர் தெற்கு பசிபிக் பகுதியில் உள்ள சாலமன் தீவு என்று கருத இடமுண்டு. ஏனெனில் இங்குள்ள புராணக் கதையின்படி, ஆதி மனிதனின் தோற்றம் கரும்பி லிருந்து வந்ததாகக்கருதப்படுகிறது. ஆனால் முறையாகக் கரும்புச் சாகு படி செய்யும் யுக்தியும், கரும்பி லிருந்து சர்க்கரை செய்யும் யுக்தியும் இந்தியாவின் கிழக்குப் பகுதி யிலிருந்து இந்தோ சீனாவுக்கும் இந்தியாவின் மேற்குப் பகுதி யிலிருந்து அராபிய நாடுகளுக்கும் பரவியது.

இந்தியாவின் பாரம்பரிய

—ஆர்.எஸ். நாராயணன்



மொழிகளுள் ஒன்றான சமஸ்கிருதத்தில், சுகர் என்ற ஆங்கிலச் சொல்லைக் குறிக்கும் ''சர்க்கரா'' அல்லது ''சக்கரா''வின் புராதன அர்த்தம் மண் அல்லது கல். இந்த சமஸ்கிருதச் சொல் அராபிய மொழியில் ''சுக்கர்'' ஆனது. கிரேக்க மொழியில் ''சக்உரான்'' என்றும் இத்தாலிய மொழியில் ''சுகீரோ'' என்றும் பிரஞ்சில் ''சுக்ரி'' என்றும் ஆங்கிலத்தில் ''சுகர்'' என்றும் வழங்கப்பட்டது.

பொருளாதாரம், விவசாயம் சார்ந்த பின்னணியில் உலக வரலாற்றைப் பகுத்து வழங்கிய ஹக் தாமஸ் என்ற வரலாற்றுப் பேராசிரியர், ''முற்றுப் பெறாத உலக சரித்திரம்'' An Unfinished History of the World: Hugh Thomas: Pan Books, London:1989) என்ற தம் நூலில், ''உலகில் முதல் முதலாக இந்தியர்களே ''நோரா'' அல்லது ''நோரியா'' என்ற பாரசீக சக்கரம் அல்லது சக்கர எந்திராயுதம் என்ற நீர்ப்பாசன இயந்திரத்தைக் கண்டுபிடித்து அதன் உதவியால் கரும்பைச் சாகுபடி செய்ததுடன் நிற்காமல் அதிலிருந்து சர்க்கரை அல்லது வெல்லம் தயாரித்தும் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி வர்த்தகம் செய்ததாக... பாரசீக-அரேபிய வரலாறுகளை ஒப்பிட்டு கருத்திசைந்துள்ளார்கள்.

புராதனத் தமிழர்களின் சங்க இலக்கியங்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப் படையில், கரும்புச் சாகுபடி குறித்தும், வெல்ல உற்பத்தி குறித்தும் வழங்கப்பட்ட செய்திகள் ஆரிய-திராவிட ஒருமைப் பாட்டுக் கருத்துக்கு வலுவூட்டுகின்றன.

**புராதன உலக வணிகம்**

கி.பி. 5,6 நூற்றாண்டுகளில் இந்தியச் சர்க்கரை, (மொலாசஸ் நீக்கப்படாத நாட்டுச் சர்க்கரை, வெல்லம்) பாரசீகத்திற்கு ஏற்றுமதியான வரலாற்று ஆதாரங்கள் உண்டு. இந்தியாவின் மேற்குத் துறைமுகங்களிலிருந்து அரபிக் கடல் வழியே கடல் மூலமாகவும், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வழியே தரைமார்க்கமாகவும் மேற்கு ஆசிய நாடுகளுக்கும் ஐரோப்பாவுக்கும் இந்தியாவிலிருந்து சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டதுடன், கரும்புச் சாகுபடிக்குத் தேவையான




''நோரா'' என்ற சக்கர எந்திரமும் பாரசீகம் கொண்டு செல்லப்பட்டது.

இந்திய நோரா அங்கு ''பெர்சியன் வீல்'' (Persian Wheel) என்று பெயரானது. இந்தப் பாரசீக சக்கரத்தினால் பாரசீகம், எகிப்து, சிசிலி, அனடோலியா ஆகிய நாடுகளில் இந்தியக் கரும்பு அறிமுகமாகி முக்கியப் பணப் பயிரானது. இந்தியாவின் நோரா என்ற நீர்ப்பாசன சக்கர யுக்தி அராபியர்களால் ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்டதை நம்மில் பலர் அறிய நியாயம் இல்லை. இது எவ்வாறு எனில், இந்தியச் சக்கரம் ''பாரசீகச் சக்கரமாக'' அங்கு பொருளானது. அவ்வாறே, சமஸ்கிருதச் சொல் ''சர்க்கரை'' என்பது அரேபிய மொழியில் ''சுக்கர்'' என்று வழங்கப்படுகிறது.

கி.பி. 8-வது நூற்றாண்டில் அரேபியா ஆக்கிரமிப்பு செய்ஸ்பெயினிலும், தெற்கு பிரான்ஸ் எல்லைகளிலும் கரும்புச் சாகுபடியும், சர்க்கரை உற்பத்தியும் நிகழ்ந்தன. சர்க்கரை வணிகத்திற்கு வெனிஸ் மையமானது. 13,14-ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் 1 பவுண்டு சர்க்கரை 1 முதல் 2 ஷெல்லிங் விற்றது. ஆனால் 15-ஆம் நூற்றாண்டில் சர்க்கரை 10 பென்சாக வீழ்ச்சியுற்றது. ஏனென்றால் அபரிதமான சர்க்கரை உற்பத்தி. அப்போது கரும்பு சாகுபடி கேனரிஸ், மேடரியா, அசோர் தீவுகளில் ஏராளமாகப் பெருகி உலகே இனிப்பு மயமானது போலும்!

ஐரோப்பிய ஃபியூடல் மன்னர்களும், இஸ்லாமிய மன்னர்களும் நிகழ்த்திய சிலுவைப் போரால் எழுச்சியுற்ற வெனிஸ் சர்க்கரை வணிகம் மெள்ள மெள்ள இடம் பெயர்ந்தது. முதன்முதலாக மொலாசஸ் நீக்கப்பட்ட சுத்தமான வெள்ளைச் சர்க்கரையின் உற்பத்தி இயந்திரம் 16-ஆம் நூற்றாண்டில் ஆண்ட்வெர்பில் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து 1584-இல் இரண்டு சர்க்கரை ஆலைகள் இலண்டனில் நிறுவப்பட்டன.

1689-இல் நியூயார்க்கில் சர்க்கரை ஆலை நிறுவப்பட்டது. இதனால் சர்க்கரையின் வணிக கேந்திர மாக இலண்டன் உருப்பெற்றது. கி.பி. 1493-இல் கொலம்பஸின் இரண்டாவது பயணம் கரும்பு சாகுபடியை புது உலகமாகிய அமெரிக்காவுக்கு அறிமுகமாகக் காரணமானது. முதலில் மேற்கு இந்தியத் தீவுகளுக்கும் பிறகு தென் அமெரிக்காவுக்கும் கரும்பு அறிமுகமானது. எனவேதான் இன்று பிரேசில், கியூபா, அர்ஜென்டினா ஆகிய புது உலக நாடுகள் சர்க்கரைப் பொருளாதாரத்தில் சிறந்து விளங்குகின்றன.

1870-இல் நெல்லிக்குப்பத்தில் இலண்டன் நிறுவனமொன்று முதல் சர்க்கரை ஆலையை உருவாக்கியது. இந்திய விடுதலைக்குப் பிறகு தான் இந்தியாவில் தனியார்களும் கூட்டுறவு அமைப்புகளும் சர்க்கரைத் தொழிலில் ஆர்வம் காட்டினர். இன்றைய இந்தியாவில் 416 சர்க்கரைத் தொழிற்சாலைகள் உண்டு. 1991-92-இல் உலக சர்க்கரை உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகித்து வருவதை வரலாற்றுப் பின்

ணணியில் கவனிக்கும்போது, சுமார் 1400 ஆண்டுகளுக்குப் பிறகு இந் நிலையை மீட்டுக்கொண்டதாகவும் கருதலாம். இன்று உலக சர்க்கரை வணிகத்தில் நமக்குப் போட்டியாக ஆஸ்திரேலியா, கியூபா, பிலிப்பைன்ஸ், சீனா, பிரேசில், அர்ஜென்டினா என்று பல நாடுகளைச் சொல்லலாம்.

கரும்பு நாணல் போன்ற நீண்ட புல்லினமே. காட்டில் இயல்பாக மண்டியிருந்த சாக்கரம் ரொபஸ்டம் (Saccharum Robustom) என்ற இப் புல்லினமே இன்றுள்ள கரும்பின் முன்னோர். இன்றுள்ள கரும்புப் பயிரினம் சாக்கரம் ஆபிஸினரம் (Saccharu, Officinarum) ஆகும். இன்று இதன் பன்முக பயோ டைவர்சிட்டி பல நாடுகளில் பல கலப்பின வீரியரகப் பயிர்களாகப் பெருகியுள்ளன.

இயல்பான நாட்டுக் கரும்பின் தோகை 24 அடி உயரம் வரை மேலே வளரும் என்றாலும் கலப்பின வீரிய ரகங்களை நாம் அவ்வளவு வளர விடுவதில்லை. ஆதி காலத்துக் கரும்பை விட இக்காலக் கரும்பு சற்று குட்டை தான். புவி இயல் அடிப்படையில் உலகத்தில் கரும்பு பயிராகும் பிரசேதங்கள் பூமத்திய ரேகைக்கு 37 டிகிரி வடக்கு (தெற்கு ஸ்பெயின்) தொடங்கி தெற்கே 30 டிகிரி (நடால், தென்னாப்பிரிக்கா) வரை வியாபித்திருப்பதைப் பார்க்கலாம்.

மித வெப்ப நாடுகளிலும், அதி வெப்ப நாடுகளிலும் கரும்பு நன்கு விளைகிறது. கரும்பு நல்ல பலனை வழங்க நீர்ப்பாசனத்துடன் அதிக பட்ச சூரிய ஒளி இருந்தால் தான் கரும்பில் சுக்ரோஸ் அதிகம் பெறலாம். அதே சமயம் சூரிய வெப்பம் 50 டிகிரி Cஐ தாண்டவும் கூடாது. குறைந்தபட்சம் 20 டிகிரி C இருந்தே தீர வேண்டும். இதன் காரணமாவே . உத்திரபிரதேசத்தை விட தமிழ்நாட்டில் விளையும் கரும்பில் நிறைய சுக்ரோஸ் அளவு (Recovery Rate) உள்ளது.

கரும்புக்குப் பனி மழை கூடாது. குறைந்தபட்சம் ஆண்டின் மழை அளவு 750 முதல் 1200 மி.மீ. வரை தேவை. அதே சமயம் உத்திர பிரதேசத்தில் உள்ள சாதகமான விஷயம் அதிக செலவு இல்லாத பாசன வசதி. மழை அளவும் அதிகம். குழாய்ச் செலவு கிடையாது. இதனால் தான் அங்கு கரும்பு சாகுபடி நிலப்பரப்பு கூடுதலாயுள்ளது.



கரும்பு ஒரு ஆண்டு பயிர் என்றாலும் இன்றுள்ள வீரிய ரகங்கள் 9 அல்லது 10 மாதங்களில் அறுவடைக்குத் தயாராகி விடும். அகில இந்திய அளவில் கரும்பு விதை ஆராய்ச்சிப் பண்ணை கோவையில் உள்ளது. அரிசிக்குக் கட்டாக் விதை ஆய்வு நிலையம் எவ்வாறு முதன்மையானதோ அவ்வாறே கரும்பு விதை ஆய்வு மற்றும் வெளியீடுகளுக்கு (Sugarcane Breeding Institute, Coimbatore-641007) முக்கியமானது. ஆண்டுதோறும் பல புதிய கரும்பு விதைகளை இந்த ஆய்வு நிலையம் வெளியிட்டு வருகிறது.

அண்மைக் கால வெளியீடுகளில் தமிழ்நாட்டிற்கு முன்பட்டத்திற்கு கோ.526, கோ.658, நடுப்பட்டம், கடைசிப்பட்டத்திற்கு கோ.419, கோ.449, கோ.740, கோ.853, கோ.6304 ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். சாதாரணமாக கரும்பு அறுவடை அக்டோபர்-நவம்பரில் தொடங்கி ஏப்ரல் வரை நீடிக்கும். பெரியார்-கோவை மாவட்டங்களில் சீசன் இல்லாத மாதங்களில் கூட கரும்பு அறுவடை உண்டு.

**பயிர்ச்சுழற்சி**

ஒரு தடவை கரும்பு நட்டுப் பயிரிட்டால் போதுமானது. ஏழு அறுவடை தொடர்ந்து செய்யலாம். அவ்வாறு அறுவடை தொடர்ந்து செய்யலாம். அவ்வாறு அறுவடை செய்யும் போது அடியில் சற்று கணுவை விட்ட வெட்ட வேண்டும். அந்தக் கணுவை விட்டு வெட்ட வேண்டும். அந்தக் கணுவிலிருந்து புதிய குருத்துகள் உருவாகும். இதை ஆங்கிலத்தில் ரட்டுனிங் (Ratooning) என்பார்கள்.

சாதாரணமாக ஒரு விவசாயி 2 அல்லது 3 தடவை ரட்டுன் செய்யலாம். பிறகு வேரோடு அழித்து தீயிட்டு வேறு பயிர் வைப்பார்கள். இல்லாவிட்டால் மகசூல் குறையும். மாற்றுப் பயிர் எழுப்பி விட்டு மறுபடியும் கரும்புபயிர் செய்வது நல்லது. கரும்பு சாகுபடி செய்வோர் உகந்தவாறு பயிர் சுழற்சி திட்டத்தை மேற்கொள்வது நல்லது. இல்லாவிடில் பூச்சித் தொல்லை அதிகமாகும்.

தென்னாட்டில் சாதாரணமாக கரும்பின் சுழற்சிப் பயிராக நெல், வாழை, பயறுகள் அமைந்துள்ளன. சோயா போன்ற பயறு வகைகளை ஊடு பயிராகவும் பயிர் செய்யலாம்.

மகாராட்டிர மாநிலத்தில் கோதுமையும் கொண்டைக் கடலையும் கரும்பின் சுழற்சிப் பயிர்கள். இன்னும் சில வட மாநிலங்களில் கோதுமை, கடலையுடன், கடுகு, பருத்தி முதலியனவும் சுழற்சிப் பயிர்களாக உள்ளன. சொல்லப்போனால் வாழை, மஞ்சள், தனியா, கருணைக் கிழங்கு, வெங்காயம், உருளை, வெள்ளரிக்காய், தர்பூசணி எல்லாமே பயிர் சுழற்சிக்கு உகந்தவை.

1989-ஆம் ஆண்டுக்குரிய F.A.O. புள்ளிவிவரப்படி, உலகளாவிய நிலையில், 167,23,000 எக்டர் கரும்பு சாகுபடியாகிறது. இதில் இந்தியாவின் பங்கு 34 இலட்சம் எக்டர். அதாவது மொத்த உலகக் கரும்பு நிலப் பரப்பில் 20 சதம் எனலாம். இந்தியாவின் நிலை பிரேசிலுக்கு அடுத்து உள்ளது. பிரேசில் நாட்டில் 40 இலட்சம் எக்டரில் கரும்பு பயிராகி அது உலக மொத்தத்தில் 24 சதம் பெறுகிறது.

மாநில வாரியாக கரும்புச் சாகுபடிப் புள்ளி விவரங்களைப் பகுத்துரைப்பதானால், கரும்பு உற்பத்தியில் முதலிடம் உத்திரபிரதேசம். உத்திரபிரதேசத்தில் மட்டும் சுமார் 9 கோடி டன்கள் கரும்பு விளைகிறது. சுமார் 18 இலட்சம் எக்டர் நிலப்பரப்பில் கரும்பு சாகுபடியாகிறது. உற்பத்தியில் உத்திர பிரதேசத்தின் பங்கு மட்டும் 44 சதம். இரண்டாவதாக மகாராட்டிய மாநிலத்தில் சுமார் 3 இலட்சம் எக்டரில் 2.6 கோடி டன்கள் விளைந்து உற்பத்தியில் 13 சதம் பங்கை வழங்குகிறது. மூன்றாவதாக தமிழ்நாட்டில் சுமார் 2.2 இலட்சம் எக்டரில் கரும்பு விளைந்து சுமார் 2.3 கோடி டன் உற்பத்தி பெற்று 12 சதம் பங்கை வழங்குகிறது.

—நன்றி: 'திட்டம்'



# கைத்தறியில் கம்ப்யூட்டர் மூலம் கண்கவர் வடிவமைப்பு

**நா**கரீகம் தொடங்கிய காலந்தொட்டு வேளாண்மையும், கைத்தறித் தொழிலும் மக்களின் வாழ்க்கையுடனும் பொருளாதாரத்துடனும் இணைந்து கிராமிய பொருளாதாரத்தினைச் சீரமைத்து வந்துள்ளன. நாட்டின் கிராமப்புற பொருளாதாரத்தில் கைத்தறித் தொழில் வகிக்கும் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. இயற்கை வளங்கள் நலிவடைந்தால் உயிர்ப்பிப்பது போன்று கைத்தறித் தொழில் நலிவடைந்தால் உயிர்ப்பிக்க இயலாது.

எனவே, கைத்தறியில் நவின யுக்திகளைப் புகுத்தி, வேலைப் பளுவைக் குறைத்து, தேவை அதிகமாக உள்ள துணி வகைகளில் உற்பத்தியினை அதிகரிப்பதில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை தீவிரக் கவனம் செலுத்தி வருகின்றது. இக்கருத்தின் அடிப்படையில் தறிகளை நவீனப்படுத்துதல், நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்தல், உயர்தரச் சாய மருந்துகள் பயன்படுத்துதல், வியாபாரமாகும் துணி ரகங்களை ஆராய்ந்து அதற்கொப்ப சரியான விற்பனை உத்திகளை வகுத்தல் போன்ற திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

இந்த நோக்கத்தை எய்தும் முகத்தான் கைத்தறித் துறை தற்போது கம்ப்யூட்டர் மூலம் புதிய வடிவமைப்புகளை அமைத்து, கைத்தறி, விசைத்தறி மற்றும் ஜவுளி ஆலைகளில் இவற்றை அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளது. இத்தகைய புதிய உத்திகளின் வாயிலாகப் பாரம்பரியமிக்க கைத்தறிகளின் பண்டைய வடிவமைப்புகளுடன் மாறி வரும் மக்களின் தேவைக்கேற்பக் கைத்தறித் துணி வகைகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நெசவாளர்கள், பொதுவாகச் சுற்றுப்புற இயற்கைச் சூழ்நிலையின் வாயிலாக அறிவு, மற்றும் தொழில்நுட்பத்துடன் இணைந்து துணிகளை வடிவமைத்து உற்பத்தி செய்துவந்தனர். ஆனால், தற்சமயம் நவீன ரகத் துணிகளை மாறிவரும் நாகரீகத்திற்கு ஏற்ப உற்பத்தி செய்தல் மிகவும் அவசியமாகிறது. மாண்புமிகு கைத்தறி - துணிநூல் துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள், தொடங்கவிருக்கும் கம்ப்யூட்டர் துணி வடிவமைப்பு மையம், குறுகிய காலத்தில் பல்வேறு புதிய ரகக் கைத்தறித் துணிகளைப் பல்வேறு வண்ண வடிவமைப்புகளுடன் உற்பத்தி செய்ய ஏதுவாக அமைவதுடன், இது கைத்தறித் துறைக்கு ஒரு திருப்பு முனையாக அமையும் என்பது திண்ணம்.

இக் கம்ப்யூட்டர் வடிவமைப்பு மையத்தின் சீரிய அம்சங்கள் பின்வருமாறு:

★ புதிய வடிவமைப்பு மையம் குறுகிய காலத்தில் எவ்வித உடல் சோர்வும் இன்றி புதிய நவீனரக டிசைன்களை உருவாக்கும் வல்லமை கொண்டது.

★ புதிய மற்றும் நூதனமான டிசைன்களை உருவாக்குவது மட்டுமன்றி பழைய டிசைன்களை தற்காலத் தேவைக்கேற்ப நெசவு செய்ய மாறுதல் செய்து தரவல்லது.

★ கம்ப்யூட்டர் வடிவமைப்பின் மூலம் 256 அடிப்படை வண்ணங்களை கொண்டு 16 இலட்சம் வண்ணங்களை ஒரே நேரத்தில் உருவாக்கும் திறன் கொண்டது.

★ கம்ப்யூட்டர் மூலம் ஒரு புதிய வடிவமைப்பினை உருவாக்கி திரையிட்டுக் காட்டி பல்வேறு வண்ணங்களைக் கொண்ட புதுப்புது டிசைன்களை உருவாக்க இயலும்.

★ துணிகளின் வடிவமைப்புகள் பல்வேறு புதுப்புது வண்ணங்களுடன், பாவு மற்றும் ஊடைக்கு ஏற்ப பலவிதமான புது டிஸைன்களைத் தானே உருவாக்கும் வல்லமை கொண்டது.

★ பல்வேறு டிசைன்களைப் பாதுகாக்கும் திறன் கொண்டது. இதனால் ஏற்றுமதியாளர்கள் சுலபமாக 'ப்பிளாபி'

மூலமாக டிசைன்களை வெளிநாட்டவரின் பரிசீலலைக்கு அனுப்பி வைத்துத் தேர்வு செய்ய ஏதுவாகும்.

★ புதிய பிளாபி டிசைன்கள் மூலம் கோடுகள் மறறும் கட்டங்களுடன் கூடிய புதிய வடிவமைப்புகளை உருவாக்கி அதனை ஆராய்ந்து பின் சிறப்பானதை இதர வண்ணங்களிலும் புகுத்தலாம்.

★ டிசைன்களை நெய்வதற்கு எற்ப நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.

★ பாவு மாற்றுதல், ஊடை மாற்று தல், வண்ணங்கள் மாற்றுதல் போன்ற செயல்முறைகளுக்கான பிரிண்ட் அவுட்டுகளை உடனுக்குடன் அளிக்க வல்லது.

★ பாவு ஊடை வண்ணங்களைத் தானாகவும், உடனுக்குடனும் மாற்ற இயலும்.

★ பல அடுக்குகளைக் கொண்ட ஜக்கார்ட் டிசைன் நெசவிற்கும் இது பெரிதும் உதவுகிறது. கம்ப்யூட்டர் இப்புதிய ஜக்கார்ட் வடிவமைப்புக் கான அட்டைகளைத் தாமே தயாரித்து, குறுகிய நேரத்தில் கைத்தறி உற்பத்தியாளர்களுக்குப் புதிய பொலிவுடன் பல்வேறு வடிவமைப்புகளில் அளிக்கிறது.

★ இந்த உத்தியின் மூலமாக 2400 பாவு இழைகள் துணிகளை நெய்ய முடியும்.

★ இதன் வாயிலாக துணிகளின் பாவு இழைகள் மற்றும் ஊடை இழைகளின் எண்ணிக்கையினை மாற்றி அமைத்து புதிய டிசைன்களை உருவாக்க முடியும்.

★ கம்ப்யூட்டர் மூலம் துணிகள் உற்பத்திக்கான மூலப் பொருட்கள் மற்றும் துணிகளின் விலை ஆகியவற்றை அறிய முடியும்.

★ டிசைன் செய்யப்படும் துணிகளின் முன்பக்கம் மட்டுமின்றி, பின்பக்கத் தோற்றத்தின் அமைப்பினையும் உடனுக்குடன் தெளிவாகக் காட்டவல்லது.

இந்தச் சீரிய ,உத்திகளின் வாயிலாகக் கைத்தறித் துணிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்த இயலும். மேலும் நெசவுத் தொழிலின் தொன்மைவாய்ந்த பாரம்பரியத்தைப் பேணிக் காப்பதுடன் மாறி வரும் மக்களின் தேவைக்கும், முன்னேறி வரும் நாகரீகத்தின் அடிப்படையில் வாங்கும் மக்களின் விருப்பத்திற்கு ஏற்பவும் துணிகளை உற்பத்தி செய்ய வழிவகை செய்ய இயலும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் கைத்தறித் துணிகள் விரைவில் விற்பனை செய்யப்பட்டு, நெசவாளர்கள் பொருளாதார நிலை மேம்பாடடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நலிவுற்ற கலைஞர்களுக்கு நிதியுதவி!

வறுமையில் வாடும் வயது முதிர்ந்த நலிவுற்ற கலைஞர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு, நிதி உதவி வழங்கும் நலத்திட்டத்தினை, தமிழக அரசு ஆண்டுதோறும் செயல்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 300 நலிவுற்ற கலைஞர்கள் நிதி உதவி பெறுவதற்காகத் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் 400 ரூபாய் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகின்றது.

1991-92-ஆம் ஆண்டிற்கான நலிவுற்ற கலைஞர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற மனுக்களை ஆய்வு செய்து, தகுதியானவர்களைத் தேர்வு செய்ய ஒரு தேர்வுக் குழு அமைக்கப்பட்டது. அந்தத் தேர்வுக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், வறுமையில் வாடும் நலிவுற்ற 301 கலைஞர்களுக்கு 1.4.1993 முதல் மாதந்தோறும் 400 ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். இந்த மாதாந்திர உதவித் தொகையான 400 ரூபாய் மூன்றாண்டுக் காலம் வழங்கப் படும். இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 3,368 நலிவுற்ற கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## 17 தமிழறிஞர்களுக்கு நிதியுதவி!

வறுமையில் வாடும் வயது முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு அவர்களது முதுமைக் காலத்தில் உதவி செய்யும் பொருட்டு 1978-ஆம் ஆண்டு முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் ''அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர் நிதி உதவித் திட்டத்தின்'' கீழ் நடப்பு ஆண்டில் (1993-94-இல்) வறுமையில் வாடும் வயது முதிர்ந்த 17 தமிழ் அறிஞர்களுக்கு நிதி உதவி வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 17 தமிழ் அறிஞர்களுக்கும் மாதந்தோறும் 400 ரூபாய் உதவித் தொகை 1.4.1993 முதல் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். 1994 ஜனவரி மாதத்தில் திருவள்ளுவர் அரசு விழாவில் இந்தத் தமிழ் அறிஞர்கள் வரவழைக்கப்பட்டு, உதவிகள் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்படுவார்கள்.

# ஆடு வளர்ப்பும், கூட்டுறவுச் சங்கங்களும்

தமிழகத்தில் செம்மறி ஆடு வளர்ப்பு, ஊரக வளர்ச்சியின் மேம்பாட்டிற்கு மிகப் பெரிய அளவில் உதவி வருகிறது. மலை வாழ் மக்கள், வறட்சிப் பகுதியில் வாழும் மக்கள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு செம்மறி ஆடு வளர்ப்பின் மூலமாக வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, தமிழ்நாடு அரசு, பல்வேறு திட்டங்களை ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, வாத்து வளர்ப்பு மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடைமுறைப்படுத்துகிறது.

ஆடுகள், கோழிகள், வாத்துகள், நாய்கள் பன்றிகள் வளர்ப்போருக்கென்று உதவிகள் புரியவுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் 1964-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறையின் நிர்வாகத்தில் இயங்கி வருகின்றன. இவற்றிற்கு மாநில அளவில் கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர் செயற்பதிவாளர் ஆவார். மண்டல அளவில் மண்டல இணை இயக்குநர்களுக்கும், கோட்ட அளவில் உதவி இயக்குநர்களுக்கும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்படி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள முறையில் மேற்படி கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல், ஆய்வு செய்தல், விசாரணை மேற்கொள்ளுதல், தாவாக்கள் தீர்ப்பு அளித்தல், கலைத்தல் முதலிய அனைத்துப் பணிகளும், கால்நடைப் பராமரிப்புத் துறையில் கவனித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் செயல்படும் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 1,426 உள்ளன. இவை பெரும்பாலும் சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன், மதுரை, திண்டுக்கல், தென்னார்க்காடு, வட ஆர்க்காடு-அம்பேத்கர், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., சேலம், தருமபுரி மாவட்டங்களில் உள்ளன. இவற்றுள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அங்கத்தினர்களுக்காகவும், மகளிருக்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும். கால்நடைப் பராமரிப்பு இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஆடு, கோழி, வாத்து, பன்றி, நாய் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களுக்கெனவுள்ள மொத்தம் 1,463 கூட்டுறவுச் சங்கங்களில் 1,65,215 உறுப்பினர்கள் உள்ளனர்.

உறுப்பினர்களின் பொருளாதார நிலையை ஆடு வளர்ப்புத் தொழில் மூலம் உயர்வடையச் செய்வதே ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதம நோக்கமாகும். இதற்காக உயர் இன ஆடுகளை வாங்கவும் விற்கவும் அவற்றை உறுப்பினர்கள் பெறக் கடன் வசதியும் தொழில் நுட்ப வசதியும் ஏற்படுத்தித் தரும் சேவைகளை ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்கின்றன.

**டாக்டர் எஸ்.பி. அன்புமணி**
**இயக்குநர்,**
**கால்நடைப் பராமரிப்புத்துறை**

இந்த நோக்கத்திற்கு, அரசாங்கம் மற்றும் இதர நிதி நிறுவனங்களால் அளிக்கப்படும் கடன், மானியம் மற்றும் இதரச் சலுகைகளை உறுப்பினர்களுக்குக் கிடைப்பதற்கு ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பாடு செய்கின்றன. உறுப்பினர்களின் ஆடுகள் மேய்ச்சலுக்குப் பொது இடங்களும், சத்துள்ள தீவனம் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்கின்றன. ஒவ்வொரு ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் அருகாமையிலுள்ள கால்நடைப் பராமரிப்புத் துறையின் மருத்துவ நிலையங்களிலிருக்கும் மருத்துவர்கள் மூலமாகக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு ஆடுகளை லாபகரமாகப் பராமரிக்கத் தக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆடுகளுக்கு தொற்றும் மற்றும் தொற்றா நோய்களுக்கான தடுப்பு முறை வசதிகளும் அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறையினரால் ஆடு வளர்ப்பிற்காகப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. இவற்றில் முக்கியமானது, சிறப்பு மத்திய உதவி ஆடு வளர்ப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின்படி ஆண்டு தோறும், மானியத்துடன் கூடிய கடனுதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒரு யூனிட் என்பது 20 பெண் ஆடுகளும், ஒரு கிடா ஆடும் சேர்ந்ததாகும். சென்னை சிவப்பு, மேச்சேரி, மாண்டியா ஆடுகள் வாங்குவதற்கு 1 யூனிட் ரூ.8,000 வீதமும், இதர இன ஆடுகளுக்கு ரூ.7,500 வீதமும் மதிப்பீடு செய்து, வங்கிகள் கடன் வழங்குகின்றன. ஆடு வளர்க்கும் நபர்க்கு இதில் 50 சதவிகிதத் தொகை மானியமாகவும் மற்றும் 4 சதவிகித ஆடு அலகு விலையில் காப்பீட்டிற்காக மானியமும் கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 1988-89-இல் 3,268 யூனிட்களுக்கும், 1989-90-இல் 2,099 யூனிட்களுக்கும், 1990-91-இல் 6,250 யூனிட்களுக்கும், 1991-92-இல் 1,550 யூனிட்களுக்கும், 1992-93-இல் 1,900 யூனிட்களுக்கும், மானியம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர, தமிழ்நாடு அரசு, ஆடு வளர்ப்புக்காக, ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தையும், மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தையும் செயல்படுத்துகிறது.






### பாவேந்தருடன் பழகிய நாட்கள்

**ஆசிரியர்:**
கலைமாமணி 'தில்ருபா' சண்முகம்
**வெளியிட்டோர்:**
தில்ருபா பதிப்பகம்,
20, முதல் தெரு,
புலியூர் 2-வது ரோடு,
டிரஸ்ட்புரம், சென்னை-600 024.

பக்கம்:136 விலை:ரூ.18/-

சிறந்த இசைக் கலைஞரும், நடிகருமான நூலாசிரியர், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தைப் புரட்சிக் கவிஞரிடம் அறிமுகம் செய்துவைத்த சிறப்பினராவார்.

திராவிட இயக்கத்தின் எழுச்சிக் கவிஞராக இருந்தவர் புரட்சிக் கவிஞர். அவர் மரபுக் கவிதைகளின் பாதுகாப்பு அரணாக எவ்வாறெல்லாம் திகழ்ந்தார் என்பதையும்- பார்வைக்குப் புரட்சிப் புயலாக விளங்கினாலும், நட்புக்கு எப்படி அவர் நல்லிலக்கணமாக இருந்தார் என்பதையும் இந்த நூலில் விளக்கியிருக்கிறார் ஆசிரியர்.

பல்லாண்டுக் காலம் பாரதிதாசனாருடன் பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்த நூலாசிரியர், 19 தலைப்புகளின் கீழான கட்டுரைகளில் தமக்கு அவரோடு இருந்த நெருக்கத்தைப் பற்றி மட்டுமல்ல; மற்றவர்களோடு அவர் எப்படியெல்லாம் பழகினார், நடந்து கொண்டார் என்பவைகளையும் அப்படியே விவரித்துள்ளார்.

பாவேந்தர் வரலாற்றில் இந்த எழுத்தோவியத்தையும் ஓர் அங்கமாகக் கொள்ளலாம்.

—'இந்திரன்'

### மற்றொரு சுவாசம்

**ஆசிரியர்: கவிஞர் பாளை இளமாறன்,**
**வெளியிட்டோர்:**
ஸ்ரீ அர்ச்சனா பதிப்பகம்,
17 எல்லைக்கல் தெரு,
குறிஞ்சிப்பாடி,
தெ.ஆ. மாவட்டம்-607 302.

பக்கம்:96 விலை:ரூ.15/-

அருமையான மரபுக் கவிதைகள் 60-ன் தொகுப்பு நூலாக விளங்குகிறது. இந்த 'மற்றொரு சுவாசம்' நூல். இடையிடையே இனிக்கும் சந்தப் பாடல்களும் காணப்படுகின்றன.

சூரிய வேர்கள், வானச் சங்கிலி, காலில்லாப் பந்தல்- போன்ற புதுப்புது சொற்கள்; 'சூரிய நெருப்பில் தூங்கிய மீன்கள்' (கருவாடு) போன்ற புதுப்புது உவமைகள் தட்டுப்படும் கவிதைகள் இடையிடையே, சமுதாயச் சழக்குகள் சாடப்படுவது போற்றத்தக்கது.

மரபுக் கவிதை விரும்பிகளுக்கு இந்த மற்றொரு சுவாசம் மகிழ்வளிக்கும் எனலாம்.

### அறிவுரைகள் அறிவுரைகள்

• வாழ்க்கையில் ஓர் இலட்சியம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், செல்வத்தைத் தொடர்ந்து பெற முடியும்.

—ஸ்டீபென்சன்

• உங்கள் எண்ணங்கள் எப்படியோ, அப்படித்தான் வாழ்க்கையும் அமையும்.

—மார்க்கஸ் அரேலியஸ்

• கல்வி என்பது, தெரியாததைத் தெரியச் செய்வதோடு, ஒழுக்கத்தையும் கற்பிப்பதேயாகும்.

—ரஸ்கின்

• மனிதன் கோபத்தை அன்பாலும், தீமையை நன்மையாலும் வெல்ல வேண்டும்.

—புத்தர்

• நேர்மையும், சத்தியமுமே ஒவ்வொரு பண்புக்கும் அடிப்படை.

—கன்பூஷியஸ்

• பயனில்லாமல் ஒரு வார்த்தைகூட வாயிலிருந்து வெளிவராதிருக்கும்படி எச்சரிக்கையாய் இரு.

—ஆதிசங்கரர்

• உறுதியும், அன்பும், நம்மிடம் தோன்றும் பெரிய கவலைச் சுமையை நீக்கும்.

—எமர்சன்

### முயற்சி செய்தால் முன்னேறலாம்

**ஆசிரியர்: சீ.க. மணியம்,**
**வெளியீடு:**
மோகன் புத்தக நிலையம்
4, வள்ளலார் தெரு, பத்மநாப நகர்,
சூளைமேடு, சென்னை-600 094.

பக்கம்:96 விலை:ரூ.13/-

முயற்சி இருந்தால் முன்னேறலாம் என்பதை மனதில் பதியும் வண்ணம், பல உதாரணங்களோடு விளக்குகிறது இந் நூல். அந்த முன்னேற்றமும் முயற்சியும் குறுக்கு வழியில் இருக்கக் கூடாது என்கிற அறிவுரையோடு, விடாமுயற்சியால் உன்னத நிலைக்கு உயர்ந்தவர்களையும் கோடிட்டுக் காட்டுகிறது இது. முன்னேற முனைபவர்க்குக் கைகொடுக்கும் நூல்.

—என். குமாரசாமி

### குழந்தை உளவியல்

**ஆசிரியர்: பாஞ். இராமலிங்கம்**
**வெளியீடு:**
ராஜகுமாரி பப்ளிகேஷன்ஸ்
எண்.20, நியூசெஞ்சுரி காலனி,
அம்பத்தூர், சென்னை-600 058.

பக்கம்:184 விலை:ரூ.25/-

'உளவியல் என்றால் என்ன? என்ற விளக்கத்துடன் தொடங்கி, குழந்தை உளவியலை அற்புதமாக எளிமையாக, பல பிரிவுகளாகப் பிரித்து விளக்கி இருக்கும் முறை பாராட்டுக்குரியது. ஒவ்வொரு பெற்றோரும் படித்துணர வேண்டிய மிகப் பயனுள்ள நூல்.

—என். குமாரசாமி

### கல்கி சகாப்தம்

**ஆசிரியர்: பி.எஸ். மணி**
**வெளியீடு:**
மகாகவி பதிப்பகம்
9, அனுமார் கோவில் தெரு
மேற்கு மாம்பலம், சென்னை-33

பக்கம்:88 விலை:ரூ.12/-

'கல்கி' பத்திரிகையில் 43 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர் பி.எஸ். மணி. சிறந்த குழந்தை எழுத்தாளர். விளையாட்டு விமர்சகர். அவர், கல்கியில் பணியாற்றியபோது, பேராசிரியர் கல்கியோடு தமக்குள்ள ஈடுபாட்டை எழுத்து வடிவமாக்கித் தந்துள்ளார். சுவையான நடை. பேராசிரியர் கல்கியின் அருமை பெருமைகளையெல்லாம் அழகுறத் தொகுத்துத் தந்திருக்கிறார் ஆசிரியர். அனைவரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய சுவையான செய்திகள் உள்ளன.

— மறைமலை

## மாணவர் பக்கம்:

# உதவி செய்யப் போறேன்

பாப்பித்தன்

உதவி செய்யப் போறேன் - நானும்
உதவி செய்யப் போறேன்!
புதுமைப் பொதுமைத் தொண்டால் - உலகப்
புகழை யடையப் போறேன்!
சேர்ந்து படிப்போர் நல்ல - நட்பைச்
சீராய் வளர்க்கப் போறேன்!
சோர்ந்து நெஞ்சத் தளரும் - போக்கைச்
சிரிப்பால் நீக்கப் போறேன்!
படித்த பழைய நூல்கள் - இருந்தால்
படிக்கக் கொடுக்கப் போறேன்!
கடிந்து பேசா தெவரும் - போற்றக்
கனிவாய் நடக்கப் போறேன்!
சாதி, மதங்கள் பேத - மின்றிச்
சமமாய் நடக்கப் போறேன்!
பாதி யோடு படிப்பை - நிறுத்தும்
போக்கை யொழிக்கப் போறேன்!
ஊன முற்றோர் யாரும் - உள்ளம்
உவக்கப் பண்ணப் போறேன்!
மான வீரத் தோடு - வாழ
மாசை யகற்றப் போறேன்
மொழியி னோடு நாட்டுப் - பற்றும்
மேலாய் வைக்கப் போறேன்!
அழிவில் கடமை யாற்றி - உரிமை
அனைத்தும் அடையப் போறேன்!
சிறிய உளியே பெரிய - மலையைச்
சிதைக்கும் மொழியைப் போலச்
சிறுவன் எனினும் என்னா - லாகும்
செயலை யாற்றப் போறேன்!

## இலட்சத் தீவுகள்



இலட்சத் தீவுகள் என்று இந்த யூனியன் பிரதேசம் அழைக்கப்பட்டா லும், அங்கிருப்பது 36 தீவுகளே! பவழப் பாறைகளால் ஆன இவை. கேரள கடற் கரையிலிருந்து 220-லிருந்து 440 கி. மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அரேபியக் கடலில் அழகுற அமைந்துள்ள இவற்றின் மொத்தப்பரப்பளவு 32 சதுர கி.மீட்டர்தான்!

நம் நாட்டில் உள்ள மொத்தம் ஏழு யூனியன் பிரசேங்களில் மிகவும் குறை வான நிலப்பரப்பும், மக்கள் தொகையும் (1991-51,707) கொண்ட வை இலட்சத் தீவுகள். 'கவாரத்தி'யைத் தலைநகராகக் கொண்ட இலட்சத் தீவுகளில், பத்துத் தீவுகளில் மட்டுமே மக்கள் வசிக் கின்றனர்.

தென்னை இல்லாத தீவும் உண்டோ! தென்னை மூலம் ஆண்டொன்றுக்கு 2.60 கோடி தேங்காய்கள் கிடைக் கின்றன. இலட்சத் தீவில் இலட்சக் கணக்கில் கோழி முட்டைகளும் உற்பத்தி யாகின்றன (18.18 இலட்சம்); பால் உற்பத்தி 388 மெட்ரிக் டன். 700-க்கும் மேற்பட்ட இயந்திரப் படகுகள் இங்கு உண்டு. பிடிக்கப்பட்ட மீன்களின் மதிப்பு ரூ.5 கோடி.

மொத்தம் 140 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகள் உண்டு. 54 கல்வி நிலையங்களில் 14,000 மாணாக்கர் பயில்கின்றனர்.

## தெரிந்து கொள்ளுங்கள்



◉ Photogenic என்றால் புகைப்படத்தில் அழகாகத் தெரிபவர் என்று பொருள். அதைப் போல டெலிவிஷனில் அழகாகத் தெரிபவர்களுக்கு ஒரு தனிப் பெயர் உண்டு. அது Telegenic.

◉ கைக்கடிகாரம் போல் கையில் கட்டிக் கொள்ளக்கூடிய டி.வி. செட் ஒன்றை ஜப்பானில் தயாரித்திருக்கிறார்கள். ''ஸீக்கோ டி.வி. ரிஸ்ட் வாட்ச்'' என்று பெயர். இதன் திரையின் அளவு, 30.5 மி.மீ. உயரம், 1.2 மி.மீ. அகலம்! எடை 80 கிராம். ஒலியைக் கேட்பதற்காக ''ஹெட்-போன்'' இணைப்பும் உண்டு. விலை நம்மால் வாங்க முடியாதது.

◉ விமானப் பயணத்தின் போது, பயணிகளின் பொதுபோக்கிற்காக விமானங்களிலேயே திரைப்படம் போட்டுக் காட்டும் பழக்கம் முதன் முதலாக 1961-ஆம் ஆண்டில்தான் ஆரம்பமாகியது.

◉ உலகின் மிகச் சிறிய நாடு 'துவாலு' (Tuvalu)-வாகும். பசிபிக் சமுத்திரத்தில், ஆஸ்திரேலியாவின் அருகில் உள்ள இதன் மக்கள் தொகை 8,229 தான். பரப்பளவு 24 சதுர மைல். ஒரு மருத்துவ மனையுண்டு. அதில் நான்கு டாக்டர்கள். அந்த நாட்டில் 10 பள்ளிக் கூடங்களே உள்ளன. ராணுவம் அங்கு கிடையாது.

◉ மாவீரன் நெப்போலியன் உபயோகித்த பொருட்கள் லண்டனில் ஏலம் விடப் பட்டன. அவரது எழுதுகோல்கள் இரண்டு, ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய்க்கும், சிறிய பெட்டி ஒன்று ரூ.45,000-க்கும் பிரெஞ்சுக்காரர் ஒருவரால் எடுக்கப்பட்டது.

◉ பசுக்களைவிட வெள்ளாடுகள் அதிக அளவு பால் கொடுக்கின்றன. ஒரு வெள்ளாடு தான் பாலளிக்கும் ஐம்பது நாட்களில் தன்னுடைய எடையைவிட 10-லிருந்து 15 மடங்கு பாலைத் தரு கின்றது. ஒரு பசு எந்த அளவுக்குத் தீவனத்தை உண்கிறதோ, அதே அளவு பாலைத் தருகிறது.

◉ திமிங்கிலம் மீன்களில் ஒருவகை யாகவே முதலில் கருதப்பட்டது. இது சுமார் ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன், நிலத்திலிருந்து கடலுக்குக் குடி பெயர்ந்தது. இதனால் ஒரே சமயத்தில் உணவு உட்கொள்ளவும், மூச்சு விடவும் முடியும். வளர்ந்த திமிங்கிலம் 60 அடி நீளம் வரை இருக்கும். நீலத் திமிங்கிலம் ஒன்றின் எடை, சுமார் 25 யானைகளின் எடையைவிட அதிகமாம்.

—ஸ்வீட்லின் பிரபாகரன்



## சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்




இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

## உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

1 சூப்பர் பம்பர் முதல் பரிசு- மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 H.P.H.M.T. டிராக்டர(இயந்திரக்கலப்பையுடன்)

1 இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு

2 மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்

2 நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்

3 ஐந்தாவ்து பரிசுகள் - 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா

10 ஆறாவது பரிசுகள் - 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்

600 ஏழாவது பரிசுகள் - ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்

## பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)
- கிசான் விகாஸ் பத்திரம் (KVP)
- தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE )
- தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)
- 15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)
- மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)
- ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம்
- 1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D) **1% ஊக்கத்தொகை**
- 3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)
- அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)

மேலும் 2% ஊக்கத்தொகை (குறிப்பிட்ட திட்டத்திற்கு)

## சேமிப்புப்பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை,
சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

வெளியீடு: இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685
சிறு குடும்பம் - செல்வக்குடும்பம்

DIPR/884/DIS/93

## இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



## சென்னை நேரு விளையாட்டரங்கில்:

# உலக நாடுகள் பங்குகொள்ளும் 'பன்னாட்டு அழைப்புத் தடகளப் போட்டிகள்'

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைக்கிறார்!

**நேரு விளையாட்டரங்கில்...**

சர்வதேச அளவில் சென்னையில் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்கப்படவில்லையே என்ற விளையாட்டுப் பிரியர்களின் மனக் குறையை நீக்கும் வண்ணம் 40 கோடி ரூபாய் செலவில் ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கினை, சென்னைக்கு அளித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தொடர்ந்து சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகள் இங்கு நடைபெற வேண்டும் என்பதில் தீவிரம் காட்டி 'பன்னாட்டு அழைப்புத் தடகளப் போட்டிகள்' (International Invitation Athletic Meet) ஒன்றை, 1994, பிப்ரவரி மாதம், ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் நடத்த வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்.

விளையாட்டுத் துறையில் இளைஞர்களுக்கும், விளையாட்டு ஆர்வம் மிக்க வீரர், வீராங்கனைகளுக்கும் ஊக்கம் தரும் வண்ணம், இத்தகைய சர்வதேச விளையாட்டுகள் அடிக்கடி சென்னையில் நடைபெற வேண்டும் என்பதற்காக அவ்வப்போது ஆலோசனைகளை எடுத்துக் கூறி, ஆக்கப்பூர்வமான ஆயத்த வேலைகளை, தனது நேரடிப் பார்வையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் செய்து வருகிறார். அதன் விளைவாக இந்த ஆண்டு, 2.2.1994 முதல் 5.2.1994 வரை, அதாவது 4 நாட்கள், ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் பன்னாட்டு அழைப்புத் தடகளப் போட்டிகள் மற்றும் 33-வது தேசிய தடகளச் சாம்பியன் (33rd Open National Athletic Championship) பட்டத்திற்கான போட்டிகள் நடைபெற உள்ளன.

**மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்**

ஒலிம்பிக் போன்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் தொடக்க விழாவினைப் போல கோலாகலமான விழாவோடும் இந்தப் பன்னாட்டு அழைப்புத் தடகளப் போட்டி 2.2. 1994 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு மாண்புமிகு முதல்வர்





## திருக்குறள்

**திருக்குறள் 2 வரிகளில் தான் எழுதப்பட்டி ருக்கிறது. திருவள்ளுவர் யாருக்காக எழுதினார்? தமிழர்க்குப் பயன்படுவதற்காக எழுதினார். தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுவதற்காக - தன் குடும்பத் திற்காக அல்ல. தனக்காக அல்ல! 2000 ஆண்டுக் குப் பிறகு தமிழகத்தில் நமக்குப் பாராட்டுக் கிடைக்கும் என்பதற்காக அவர் எழுதவில்லை. அவர் தனது கடமையைச் செய்தார். அதன் பலன், இன்று தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.**

**—டாக்டர் எம்.ஜி.ஆர்.**

டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் தொடங்கி வைக்கப்படும். அதுமட்டுமன்றி தேசிய சாம்பியன் போட்டிகளையும் இரண்டு கோடி ரூபாய் செல வில் ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் புதிதாகச் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழைகள் வைத்து அமைக்கப்பட்டு ஓடுகளத்தையும் (Synthetic track) மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைப்பார்.

வண்ணமிகு இந்தத் தொடக்க விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு கே.பொன்னுசாமி அவர்கள் தலைமை ஏற்பார். இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு பி. சிவந்தி ஆதித்தன் அவர்கள் மற்றும் இந்திய அமைச்சூர் தடகளப் போட்டிகள் (Amateur Athletic Federation of India) அமைப்பின் தலைவர் திரு சுரேஷ் கல்மாடி ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

### கலை நிகழ்ச்சிகள்

வண்ணமிகு இந்தத் தொடக்க விழா நிகழ்ச்சி களில் இடம்பெற வேண்டிய கலை நிகழ்ச்சிகள் குறித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆலோசனை வழங் கியுள்ளார். கலை நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளப்பல நாடுகளிலிருந்து வந்துள்ள விளை யாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோர் அணிவகுத்துச் செல்வார்கள். அதனைத் தொடர்ந்து வெள்ளைச் சீருடை அணிந்து 2500 பள்ளி மாணவ மாணவியர் கொடி ஏந்தி (Flag March) அணிவகுத்துச் செல்வார்கள்.

கலை நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் 1000 பள்ளி மாணவிகள் வண்ண வண்ண ஆடை களுடன் பங்கேற்கும் குஜராத் மாநிலத்தின் தண்டியராஸ் (Dandia Ras) என்ற கோலாட்டமும், 500 மாணவர்களும், 500 மாணவிகளும் (மொத் தம் 1000 பேர்) பங்குகொள்ளும் பஞ்சாப் மாநிலத்தின் பிரசித்தி பெற்ற பாங்கராவும் நடை பெறும். 1000 பள்ளி மாணவிகள் பங்குபெறும் ஜிப்சி நடனமும் நடைபெறும். 1000 மாணவர்கள் இசைக்கேற்ப உடற்பயிற்சி செய்யும் ஜிம்னாஸ்டிக்ஸ் (Gymnastics) நடைபெறும்.

பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து தமிழகக் காவல்துறையின் 360 பேர் பங்குகொள்ளும் வண்ணமிகு கரகாட்டமும், கையில் தீப்பந்தங்களுடன் இசைக்கேற்ப அணி வகுத்துச் செல்லும் நிகழ்ச்சியும், மோட்டார் சைக்கிள்களை ஓட்டி நிகழ்த்தும் சாகசங்களும் நடைபெற உள்ளன.

### உலக நாடுகள் பங்குகொள்ளும் உன்னத விழா!

இந்தத் தொடக்க விழா நிகழ்ச்சிகள் முழுமைக் கும் பிரபல இளம் இசை அமைப்பாளர் திரு ஏ.ஆர். ரகுமான் இசை அமைப்பார். கலை நிகழ்ச்சிகளை பிரபல நடன ஆசிரியர் திரு ரகுராம் அவர்கள் இயக்கி வைப்பார். இக்கலை நிகழ்ச்சி களின் பாடல்களை கவியரசு திரு நா. காமராசன் அவர்கள் இயற்றுகிறார். இந்த வண்ணமிகு தொடக்க விழாவைத் தொடர்ந்து நடைபெற உள்ள பன்னாட்டு அழைப்புத் தடகளப் போட்டி களில் இந்தியா, இங்கிலாந்து, இத்தாலி, ஸ்வீடன், நார்வே, டென்மார்க் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தடகள வீரர்களும், கென்யா, நைஜீரியா, ஜமைக்கா போன்ற ஆப்பிரிக்க நாடுகளின் வீரர்களும், ரஷ்யாவின் உக்ரைன், உஸ்பெக்கிஸ்தான், அமெரிக்கா, தெற்காசிய நாடுகளின் கூட்டமைப் பில் உள்ள பூட்டான், நேப்பாளம், வங்காள தேசம், பாகிஸ்தான், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிள் வீரர்களும் பங்குகொள்வார்கள். மேலும் சீனா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளிலிருந்தும் வீரர்கள் பங்குகொள்கிறார்கள். இந்த சர்வதேச விழாவில் 60-க்கும் மேற்பட்ட தடகள வீரர்கள் 25 நாடுகளிலிருந்து கலந்து கொள்வார்கள்.

ஆண்களுக்கான 100 மீட்டர், 400 மீட்டர், 800 மீட்டர், 1500 மீட்டர், 3,000 மீட்டர் 5000 மீட்டர் ஓட்டப் பந்தயங்களும், 100 மீட்டர் தடை ஓட்டப்பந்தயமும், நீளத் தாண்டுதல் (Long Jump), குண்டு எறிதல் (Shotput), தட்டு எறிதல் (Discus throw), ஈட்டி எறிதல் (Javelin throw), பெண்களுக்கான 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர், 1800 மீட்டர், 3000 மீட்டர், ஓட்டப் பந்தயங்களும், 400 மீட்டர் தடை ஓட்டப்பந்தய மும், (hurdles), நீளத் தாண்டுதல் (Long Jump), தட்டு எறிதல் (Discus throw) ஆகிய போட்டிகளும் நடைபெற உள்ளன. 700-க்கும் மேற்பட்ட வீரர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து கலந்துகொள்கிறார்கள். புகழ்பெற்ற விளையாட்டு வீராங்கனை ஷைனி வில்சன், விளையாட்டு வீரர் பகதூர் பிரசாத் போன்றவர்களும், சமீபத்தில் டாக்காவில் நடந்த தெற்காசியக் கூட்டமைப்பு நாடுகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்ற விளையாட்டு வீரர்

# டாக்டர் எம்.ஜி.ஆர் வாழ்க்கை வரலாறு ஒலி-ஒளிக்காட்சி: ஆலோசனைக்குழு அமைப்பு



தந்தை பெரியார், மகாகவி பாரதியார் ஆகிய பெரியோர்களின் வாழ்க்கை வரலாறும் மற்றும் சாதனைகளும் ஒளி-ஒலிக் காட்சி வடிவத்தில் தமிழக அரசால் அமைக்கப் பெற்று, சிறப்புற நடத் தப்பட்டது. சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 'பாரத ரத்னா' புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய வாழ்க்கை வரலாறும், சாதனைகளும், அதே போன்று ஒளி-ஒலிக் காட்சி வடிவத்தில் தமிழக அரசால் அமைக் கப் பெறும் என்று அறிவித்திருந்தார்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர் களின் வாழ்க்கை வரலாறு, சீரிய கருத்துக்கள் மற்றும் சாதனைகள் ஆகியவை அமையப் பெற்ற ஒளி-ஒலிக் காட்சிகளை வடிவமைக்க அரசுக்குத் தக்க ஆலோசனை வழங்க, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களோடு அரசியல், கலை மற்றும் பொது வாழ்க்கையில் இணைந்து பணியாற்றிய கீழ்க்கண்ட பெருமக்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றினையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

மாண்புமிகு நிதி அமைச்சர்
திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் - தலைவர்

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள்

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்
திரு இராம வீரப்பன் அவர்கள்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு எஸ். முத்துசாமி அவர்கள்

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்
திரு இ. மதுசூதனன் அவர்கள்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்
திரு எஸ். கண்ணப்பன் அவர்கள்

மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர்
திரு எம். தென்னவன் அவர்கள்

திரு. கே. பாலசந்தர், இயக்குநர்

திரு திருலோகசந்தர், இயக்குநர்

திரு பி. மாதவன், இயக்குநர்

திரு டி.ஆர். ராமண்ணா, இயக்குநர் தயாரிப்பாளர்

திரு எம்.ஏ. திருமுகம், இயக்குநர்

திரு. கே. சங்கர், இயக்குநர்

திரு .பி. வாசு, இயக்குநர்

திரு எம்.என். நம்பியார்

திரு பி.எஸ். வீரப்பா

திருமதி மனோரமா

திரு வி. ராமமூர்த்தி, ஒளிப்பதிவாளர்

திரு என். பாலகிருஷ்ணன், ஒளிப்பதிவாளர்

இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, உறுப்பினர் – செயலாளர்.

---

களும் இந்தப் போட்டிகளில் கலந்து கொள் வார்கள்.

## விளையாட்டுச் சின்னம்

தொடக்க விழா நிகழ்ச்சிகள் குறித்தும், பன்னாட்டு அழைப்புத் தடகளப் போட்டிகள் நடத்துவது குறித்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கி, இந்த விழாவையும், விளையாட்டுப் போட்டிகளையும் சிறப்புடன் நடத்துவதற்குத் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி வரு கிறார்கள். இளம் சிங்கம் தடை தாண்டுவதைப் போன்ற ஒரு விளையாட்டுச் சின்னத்தை இந்தப் பன்னாட்டு அழைப்புத் தடகளப் போட்டிகளின் சின்னமாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தெரிவு செய்து உள்ளார்.

இந்த விழாவில் உலகப் புகழ்பெற்ற கென்யா நாட்டைச் சேர்ந்த பால் ரூட்டோ (Paul Ruto), உக்ரைனைச் சேர்ந்த லாரிசா பிரஷ்னயா(Larissa Bereznaya), அமெரிக்காவைச் சேர்ந்த செலினா மண்டல் (Celina Mundle) ஆகியோர் தமிழக அரசின் அழைப்பை ஏற்றுக் கலந்துகொள்கிறார்கள்.

சர்வதேசத் தடகளப் போட்டிகளும், வண்ண மிகு கலை நிகழ்ச்சிகளும் சிறப்புற நடைபெறுவதற் காக எடுக்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அவ்வப்போது அலுவலர்களுக்கு நேரடி யாக ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.



# பொங்கல் வந்தது!

—கவிஞர் பி.வி. கிரி

அன்பும் பண்பும் மலர்ந்திடவே
அருளும் பொருளும் குவிந்திடவே
அன்னைத் தமிழை வளர்த்திடவே
அன்புப் பொங்கல் வந்ததுவே!

ஏழ்மை தாழ்மை விலகிடவே
எல்லார் எல்லாம் பெற்றிடவே
வாழும் உயிர்கள்தழைத்திடவே
வளமைப் பொங்கல் வந்ததுவே!

கடமை உரிமை இணைந்திடவே
கருத்தாய் இரண்டே பெற்றிடவே
மடமை இருளைப் போக்கிடவே
மங்கலப் பொங்கல் வந்ததுவே!

வளமும் நலமும் பெருகிடவே
வாழ்நாள் முழுதும் உழைத்திடவே
களமாய் நெல்லைக் குவித்திடவே
கரும்புப் பொங்கல் வந்ததுவே!

பெண்ணின் பெருமை பேசிடவே
பேதங்கள் யாவும் ஒழிந்திடவே
மண்ணைப் பொன்னாய் ஆக்கிடவே
மகிழ்ச்சிப் பொங்கல் வந்ததுவே!

எண்ணும் எழுத்தும் கற்றிடவே
எளிமை வாழ்வில் கொண்டிடவே
பண்ணும் இசையும் பரவிடவே
பாசப் பொங்கல் வந்ததுவே!

பெண்சிசு அழிவை ஒழித்திடவே
பேதமை, வேரொடு களைந்திடவே
உண்மை, உயிரில் கலந்திடவே
உன்னதப் பொங்கல் வந்ததுவே!

நாடும் ஏடும் சிறந்திடவே
நன்மை ஆயிரம் பெருகிடவே
பாடும் குயிலாய் இலங்கிடவே
பல்சுவைப் பொங்கல் வந்ததுவே







## தமிழ் வளர்த்த பெரியார்:

# திருக்குறளார் வீ. முனிசாமி

"ஏ, மனிதனே! சிரித்து மகிழ்வதோடு நின்று விடாமல், சிந்திக்கவும் மறக்க வேண்டாம்."

இந்த வாசகத்தை யார் சொல்லியிருப்பார்கள்?

யோசிக்கவே வேண்டாம், எல்லாம் திருக்குறளார் வீ. முனிசாமி அவர்களின் திருவாசகமே இது!

திருக்குறளாரின் வாழ்க்கை ஏட்டைப் புரட்டுகிறோம். அவரது பெருவாழ்வு நமக்கெல்லாம் முன்மாதிரியாக இருக்கின்ற பாங்கினைப் பார்க்கின்றோம்.

சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்த கலைவாணர் என்.எஸ்.கே.யைப் போல, தமது பேச்சிலே அந்த இரண்டு தன்மைகளையும் இழைய' விட்டவர் திருக்குறளார் வீ.முனிசாம் அவர்கள்.

திருக்குறளார் பேசுகிறார் என்றாலேயே அங்கு திரளான கூட்டம் கூடிவிடும். அவருக்கென்றே சுவைஞர் கூட்டம் ஒன்று தமிழ் நாட்டிலே இருந்தது. மேடையிலே அவர் வீற்றிருக்கிறார் என்றால், அவர் எப்போது பேசுவார் என்று எதிர்பார்த்துக் காத்திருப்போரும் உண்டு.

அவர் பேச ஆரம்பித்தால், சிரிப்பு மத்தாப்புக்கள் சிதறிவீழும்; சிந்தனைச் சரங்கள் அணிவகுக்கும்.

படிக்காத பாமரர்க்கும் புரியும் வகையில் அவரது பேச்சில் எளிமையும், இனிமையும் கலந்திருந்தது. சொல்ல வேண்டிய கருத்தைப் பட்டுக் கத்தரித்தாற்போன்று பட்டென்று சொல்லுவார். அவரது பேச்சில் வெறும் வார்த்தை ஜாலம் இருக்காது; கருத்துக் கோலமே கை கோத்து நிற்கும்.

அவரது எளிய இனிய தோற்றம், கேட்டார்ப் பிணிக்கும் வகையில் சொல்கின்ற சொல்வன்மை அவையோரை வெகுவாக ஈர்த்தன.

அத்தகைய பெருந்தகையாளர், 26.9.1913-இல் விழுப்புரத்தில் பிறந்தார். பெற்றோர் வீராச்சாமி-வீரம்மாள். தொடக்கக் கல்வியை விழுப்புரத்திலும், உயர்நிலைக் கல்வியைத் திருச்சி புனித ஜோசப் கல்லூரியிலும் பயின்று பி.ஏ., பட்டம் பெற்றார். பின்னர் சென்னை சட்டக் கல்லூரியில் பி.எல்., பட்டம் பெற்றார்.

அவர் வழக்குரைஞராக இருந்தாலும் அந்தத் தொழிலில் ஈடுபடாமல், முழுக்க முழுக்கத் திருக்குறள் நெறி பரப்பும் பணியிலேயே மூழ்கியிருந்தார். சுருங்கச் சொன்னால், தம் வாழ்நாள் முழுவதும் குறளுக்காகவே குரல் கொடுத்தவர் திருக்குறளார் அவர்கள்.

தமது எட்டாவது வயதிலேயே திருக்குறளைக் கற்கத் தொடங்கினார். அவரது மூத்த சகோதரர் தியாகராசன் இந்த ஆர்வத்துக்கு ஊக்கமூட்டினார். தமது பத்தாவது வயதிலேயே 1,330 அருங்குறட்பாக்களையும் மனப்பாடமாகக் கூறக் கூடிய சாதனை புரிந்தார்.

**திருக்குறள் நெறிபரப்பு மையத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்ட திருக்குறளார் திரு வீ. முனிசாமி அவர்கள், தமது மகன்களுடன், 13.5.93 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து, திருக்குறள் நூல்களை வழங்கி வாழ்த்துப் பெற்றபோது எடுத்தப் படம்.**



திருக்குறள் நெறிபரப்பின் தலைவராக இருந்து வான்புகழ் வள்ளுவனின் புகழை உலகமெல்லாம் பரவும் வகை செய்தார். இலவசத் திருக்குறள் பயிற்சி வகுப்பு நடத்தி, குறளின் கருத்தை ஒவ்வொருவரும் உணரும்படி செய்தார்.

1952-இல், திண்டிவனம் நாடாளு மன்றத் தொகுதித் தேர்தலில் போட்டியிட்டு ஒரு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

1951-ஆம் ஆண்டு 'திருக்குறளார்' என்னும் விருதினை உடையார்பாளையம் ஜமீன்தார் வழங்கினார். திருக்குறளார் 'குறள் மலர்' என்னும் வார இதழை நடத்தினார். 1941-இல் சேலத்தில் திருக்குறள் மாநாட்டை நடத்தினார்.

திருக்குறளாருக்கு 1935-ஆம் ஆண்டில் திருமணம் நடந்தது. மனைவி பெயர் ஞானம். இவர்களுக்கு ஆறு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர். திருக்குறளாரின் துணைவியார் திருமதி ஞானம், 1985-இல் இயற்கை எய்தினார்.

திருக்குறளாரைப் பற்றிப் பாவேந்தர் பாரதிதாசனார் கூறுகையில்,

''குறட்பயன் கொள்ள நம் திருக்குறள்
முனிசாமி சொல்
கொள்வது போதுமே''.

என்று அவரது புகழை மேலும் உயர்த்தினார்.

திருக்குறளார் எழுதிய 'உலகப் பொதுமறை திருக்குறள் விளக்கம்' என்னும் 1200 பக்க நூல் ஒன்றை டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வெளியிட்டுள்ளார். இது குறளின் குரலாக விளங்கும் அற்புத நூலாகும்.

'வள்ளுவனார் உள்ளம்' முதல் 'திருக்குறள் அதிகார விளக்கம்' முடிய 36 நூல்கள் எழுதியுள்ளார்.

தமிழ்மறைக் காவலர், திருக்குறள் கேசரி, முப்பால் வித்தகர், நகைச்சுவை இமயம், திருக்குறள் திலகம் முதலான பல விருதுகள் பெற்றவர்.

1983-இல் தமிழக அரசின் திரு.வி.க. விருதும், 1984-இல் 'கலைமாமணி' விருதும் பெற்றவர்.



உலகப் பொதும்றையாம் திருக்குறள் பற்றிய ஆராய்ச்சியில் திறன் மிகுந்த திருக்குறள் அறிஞர் ஒருவருக்குக் கடந்த 1986-ஆம் ஆண்டு முதல் 'திருவள்ளுவர் விருதினை' திருவள்ளுவர் திருநாள் அன்று தமிழக அரசு வழங்கி வருகின்றது.

1994-ஆம் ஆண்டிற்குரிய திருவள்ளுவர் விருது, திருக்குறளார் வீ. முனிசாமி அவர்களுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார். ஆனால், அதற்குள்ளாகவே திருக்குறளார் அவர்கள் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தார்கள்.

சிகிச்சைக்காக மருத்துவமனையில் சோக்கப்பட்டிருந்த அவர், 4.1.1994 அன்று தமது 81-வது வயதில் இயற்கையெய்தினார்.

நம்மையெல்லாம் சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்த அவர், இன்று நாமெல்லாம் கண்ணீர் சிந்தும்படி பிரிந்துவிட்டார்.

அன்னார் மறைந்தாலும், அவரது புகழ், திருக்குறள் உள்ளவரை திகழ்ந்து கொண்டே இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பி.வி. கிரி



## கருத்துச் செல்வம் திருக்குறள்

''திருக்குறளிலே சொல்லப்பட்ட கருத்துக்களை எப்படிப் பயன்படுத்தலாம், எந்த வகையில் பயன்படுத்தலாம் என்பதில் திருக்குறளிலே நாட்டம் உள்ளவர்கள் கவனம் செலுத்த வேண்டும். மற்றவர்கள் துண்டுதுண்டாகச் சொன்னதை இவர் ஒருவரே சொல்லி இருக்கிறார். பத்துப் பேர் சொல்லியதைத் திருவள்ளுவர் ஒருவரே சொல்லி இருக்கிறார். இன்னும் சொன்னால், இவர் சொன்ன பிறகுதான் மற்றவர்கள் எல்லாம் சொல்ல ஆரம்பித்தார்கள்.

திருக்குறள் எழுதப்பட்ட காலத்தில் அதற்கு ஒப்பான நூல் எதுவும் எழுதப்படவில்லை; உலகத்தில் மற்றவர்களிடத்தில் இல்லாத கருத்துச் செல்வமாம் திருக்குறள் நம்மிடத்திலே இருக்கிறது.

—பேரறிஞர் அண்ணா



# தெற்காசிய நாடுகளின் விளையாட்டு நிகழ்ச்சிகள் சென்னையில் நடைபெறும்

## — மாண்புமிகு முதல்வர்

தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான சார்க் (SAARC) நிறுவனத்தின் சார்பில் தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை உறுப்பினர் நாடுகளில் ஏதேனும் ஒன்றில் நடத்தப்பட்டு வருகின்றன.

1993-ஆம் ஆண்டிற்கான தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் பங்களா தேஷ் நாட்டின் தலைநகரமான டாக்கா நகரத்தில் நடைபெற்றது. 1995-ஆம் ஆண்டிற்கான விளையாட்டு நிகழ்ச்சிகளை இந்தியா பொறுப்பேற்று நடத்துகின்ற சூழ்நிலையை அறிந்தவுடன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந்த விளையாட்டுகளை நாட்டின் தலைநகரத்தில் மட்டுமின்றி, இதர மாநிலங்களின் தலைநகரங்களிலும் நடத்த வேண்டும் என்கின்ற ஒரு நல்ல எண்ணத்துடன் 1995-ஆம் ஆண்டிற்கான தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளைத் தமிழகத்தின் தலைநகரமான சென்னை மாநகரத்தில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்ததுடன், இந்த விளையாட்டுகளை நடத்துவதற்குரிய அனைத்து வசதிகளையும் தமிழக அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து இருந்தார். அதன் அடிப்படையில் அடுத்த தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் சென்னை மாநகரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

ஒரு இடத்தில் தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று முடியும்போது, அடுத்த முறை அந்த விளையாட்டுக்களை நடத்தும் நாட்டிற்கு, தெற்காசிய நாடுகளின் விளையாட்டு அமைப்பின் கொடியையும், விளையாட்டுச்சுடரையும் (Torch) கொடுத்து வரும் மரபு பழக்கத்தில் உள்ளது. அந்த மரபின் அடிப்படையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர்





# இதயக்கனி

''எம்.ஜி.ஆரைப் பாராட்டுவது - என்னை நானே பாராட்டிக் கொள்வதாகக் கருதப்படும்.

உண்மைதானே!

எம்.ஜி.ஆர். என்றால் அவர் தாங்கியுள்ள கொள்கை எது என்பதை நாடு அறியும்.

முல்லைக்கு மணம் உண்டு என்பதைக் கூறிடவா வேண்டும்?

இந்தக் கனி தங்கள் மடியில் விழாதா என்று பலர் எதிர்பார்த்தனர். அது என் மடியில் விழுந்தது. என் இதயத்தில் எடுத்து வைத்துக் கொண்டேன்!''

—பேரறிஞர் அண்ணா

ஜெ. ஜெயலலிதா அவர்களால் டாக்கா நகரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். 27.12.1993 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு, டாக்கா விளையாட்டு அரங்கத்தில் தொடங்கிய தெற்காசிய நாடுகளின் விளையாட்டுகள் நிறைவு விழாவில் கலந்து கொண்டு அந்த விளையாட்டுகளின் அமைப்புக்கொடியை டாக்கா நகரத்து மேயரிடமிருந்து தமிழ்நாட்டின் சார்பாகவும், தமிழக முதல்வர் சார்பாகவும் அவர் பெற்றுக் கொண்டார். மேலும், தெற்காசிய நாடுகளின் 'விளையாட்டுச் சுடர்' (Torch) ஒன்றும் அவரிடம் வழங்கப்பட்டது. இந்த விளையாட்டுகளின் அமைப்புக் குழுவின் தலைவர் மற்றும் பங்களாதேஷின் நிதி அமைச்சரும், கல்வி அமைச்சரும், இந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். பங்களாதேஷின் பிரதமர் திருமதி. கலிதா பேகம் இதில் கலந்து கொண்டார் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள் தமிழக முதல்வரின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும், 1995-ஆம் ஆண்டு சென்னையில் நடக்கவுள்ள விளையாட்டு நிகழ்ச்சியின்போது வந்து கலந்து கொள்ள வேண்டுமென்று பங்களாதேஷ் நாட்டின் பிரதமர், நிதி அமைச்சர், கல்வி அமைச்சர் மற்றும் பலரையும் கேட்டுக் கொண்டார்.

31.12.1993 அன்று, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள், தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் அமைப்பின் கொடியையும், விளையாட்டுச் சுடரையும் (Torch) மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார். அதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் பெற்றுக் கொண்டார். இந்தத் தெற்காசிய நாடுகளின் விளையாட்டு நிகழ்ச்சிகள் சென்னையில் 1995-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும். அதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.



# தமிழக மக்களின் உள்ளங்களைப் பிரதிபலிக்கும் 69 சதவீத இட ஒதுக்கீட்டுச் சட்ட முன்வடிவு சட்டப்பேரவையில் நிறைவேற்றம்!

**தமிழ்நாடு மாநிலத்திலுள்ள, குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பட்டியல் சாதிகளையும் பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்தவர்களுக்கும், இம்மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்களில் இடங்களையும், அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளையும் ஒதுக்குவதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்ட முன் வடிவு.**

குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக, இம்மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளப் படுவதிலும், மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களுக்கான இடங்களை ஒதுக்கீடு செய்யும் கொள்கையொன்று, தமிழ்நாடு மாநிலத்தில் நெடுங்காலமாகவே நடைமுறைப்படுத்தப் பட்டு வந்திருக்கின்றது என்பதாலும்;

தமிழ்நாடு மாநிலமானது, சமுதாயத்தின் அடிநிலையிலுள்ள மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதில் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கிவந்திருப்பதாலும், பின்தங்கிய சமூகங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கின்ற முதலாவது அரசாணையானது 1921-ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு மாநிலத்தில் 1927-ஆம் ஆண்டில் பின்தங்கிய சமூகங்களுக்கு விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பதாலும்;

பல ஆண்டுகளாகச் சமூக மற்றும் கல்வித் துறைகளில் பிற்படுத்தப்பட்ட நிலையில் உழன்று வந்துள்ள, தமிழ்நாட்டு மக்கள்தொகையின் பெருமளவு சதவீதத்தினர் மேற்சொன்ன இடஒதுக்கீட்டுக் கொள்கையின் பயன்களைத் துய்க்கத் தொடங்கியுள்ளதோடு, அவர்கள் தங்கள் நிலையினை மேம்படுத்திக் கொள்ளவும் உயர்ந்த வாழ்க்கைத் தரங்களை எய்தவும் இயன்றுள்ளது என்பதாலும்;

அரசமைப்பின் 15-ஆம் உறுப்பின் (4)-ஆம் கூறானது, குடிமக்களில் சமுதாய நிலையிலும் கல்வி நிலையிலும் பிற்படுத்தப்பட்டுள்ள வகுப்பினர்களின் முன்னேற்றத்திற்காகவோ, அல்லது பட்டியல் சாதியினருக்கும் பட்டியல் பழங்குடியினருக்குமாகவோ தனி வகைமுறை எதனையும் செய்வதற்கு அரசிற்கு இயலுமாறு செய்கிறது என்பதாலும்;

அரசமைப்பின் 16-ஆம் உறுப்பின் (4)-ஆம் கூறானது, அரசின் கருத்துப்படி அரசின் கீழுள்ள பணிகளில் போதிய அளவிற்குப் பிரதிநிதித்துவம் பெற்றிராதவர்களான குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஆதரவாக, நியமனங்களையோ அல்லது பதவிகளையோ ஒதுக்கீடு செய்வதற்கான வகைமுறை எதனையும் செய்வதற்கு அரசிற்கு இயலுமாறு செய்கிறது என்பதாலும்;

அரசமைப்பின் 38-ஆம் உறுப்பின் (1)-ஆம் கூறின்படி, நாட்டு வாழ்வின் நிறுவனங்கள் அனைத்திலும் சமூக, பொருளாதார, அரசியல் நீதியின் பண்பு தோய்ந்து நிலவுகிற ஒரு சமுதாய அமைப்பு முறையை, அரசு, தன்னால் எவ்வளவு திறம்பட இயலுமோ அவ்வளவு திறம்பட உறுதிசெய்து காப்பதன் மூலமாக, மக்களின் நல்வாழ்வை உயர்த்துவதற்குப் பாடுபட வேண்டும் என்றிருப்பதாலும்;

அரசமைப்பின் 38-ஆம் உறுப்பின் (2)-ஆம் கூறின்படி, அரசு, குறிப்பாக, வருமானத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைந்த அளவிற்குக் கொண்டு வரப் பாடுபட வேண்டும் என்றும், தனிப்பட்டவர்களுக்கிடையே மட்டும் அல்லாமல், வெவ்வேறு பரப்பிடங்களில் குடியிருக்கின்ற அல்லது வெவ்வேறு வாழ்க்கைத் தொழில்களில் ஈடுபட்டு இருக்கின்ற மக்கள் குழுவினருக்கு மிடையேயுங்கூடத் தகுநிலை, வசதி நலங்கள், வாய்ப்புகள் ஆகியவற்றிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றப் பெருமுயற்சி செய்தல் வேண்டும் என்றும் இருப்பதாலும்;

அரசமைப்பின் 39-ஆம் உறுப்பின் (b)- கூறின்படி, குறிப்பாக, சமூகத்தின் பொருள்வளங்களில் உடைமையுரிமையும் கட்டுப்பாடும் பொதுநலத்திற்கு மிகச் சிறப்பான முறையில் பயன்படும் முறையில் பங்கீடு செய்யப்படுவதை உறுதியாக நிலைநாட்டும் நோக்கில் தன் கொள்கையினை நெறிப்படுத்துதல் வேண்டுமென்றிருப்பதாலும்;

அரசமைப்பின் 39-ஆம் உறுப்பின் (c) கூறின்படி, அரசு, குறிப்பாக, பொருளாதார அமைப்புமுறையின் செயற்பாடானது, செல்வமும் உற்பத்தி வழிவகைகளும், பொதுவான நலக் கேட்டினை உருவாக்கும் வகையில் ஒரே இடத்தில் குவிந்திருக்கும் நிலையை விளைவிக்காமல் இருக்குமாறு உறுதியாகப் பார்த்துக் கொள்ளும் வண்ணம் தன் கொள்கையினை நெறிப்படுத்துதல் வேண்டும் என்றிருப்பதாலும்;

அரசமைப்பின் 46-ஆம் உறுப்பின் படி, அரசு மக்களில் நலிந்த பிரிவினரின், அதிலும் குறிப்பாக, பட்டியல் சாதியினரின் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் கல்வி, பொருளாதார நலன்களைத் தனிக் கவனத்துடன் மேம்படுத்துதல் வேண்டும் என்றும், சமூக அநீதிகளிலிருந்தும் அனைத்து வகைச் சுரண்டல்களிலிருந்தும் அவர்களைப் பாதுகாத்தல் வேண்டும் என்றும், இருப்பதாலும்;

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் சார்பாளர்களாகப் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசமைப்பின் 16-ஆம் உறுப்பின்(4)-ஆம் கூறின்படியான இட ஒதுக்கீடுகள் குறித்த ''இந்திரா சஹானி - எதிர் - இந்திய அரசு (A.I.R. 1993 S.C. 477)'' எனும் வழக்கில் 1992-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16-ஆம் தேதி வழங்கப்பட்டுள்ள உச்சநீதிமன்றத் தீர்ப்புரையின் அனைத்துக் கூறுபாடுகளையும் ஆராயுமாறும், அவர்களின் நலன்களைப் போதுமான அளவிற்குப் பாதுகாக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் மாநில அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர் என்பதாலும்;

மாநில அரசின் கருத்துப்படி, இம் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக அமைந்திருக்கின்ற 'குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பட்டியல் சாதிகளையும் பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்தவர்களுக்கும் தமிழ்நாடு மாநிலத்தில் அவர்களின் மக்கட்தொகைக்கு ஏற்ற விதத்தில் அரசின் கீழுள்ள பணிகளில் போதிய அளவிற்குப் பிரதிநிதித்துவம் இல்லையென்பதாலும்;

தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள பெரும்பான்மை மக்களின் முன்னேற்றத்தை உறுதி செய்வதற்காக வேண்டி, குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பட்டியல் சாதிகளையும் பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்த நபர்களுக்கும், இம்மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதிலும், அரசின்கீழ் உள்ள பணிகளிலும் அறுபத்தொன்பது சதவீத இடஒதுக்கீடு என்று தற்போது இருந்து வருகிற அளவானது, தொடர்ந்து நீடிக்கப்படுதல் வேண்டும் என்று இம் மாநில அரசு கவனமாகப் பரிசீலனை செய்ததற்குப் பின்னர், கொள்கை முடிவொன்றை எடுத்துள்ளதாலும்;

> கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் வேலிகளை மூன்று பக்கமும் அமைத்து, நான்காவது பக்கம் பொதுநலம் என்ற அரண் கட்டி அமரிக்கையுடன் வாழ்கின்றாரே ஒரு நல்லவர்-அவர்தான் எம்.ஜி.ஆர்.!
>
> —டாக்டர் மு.வரதராசனார்.

இந்தியக் குடியரசின் நாற்பத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

## குறுந் தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்

*1. (1)* இந்தச் சட்டம், *1993-ஆம்* ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களுக்கு (கல்வி நிலையங்களில் இடங்களையும், அரசின்கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளையும் ஒதுக்கீடு செய்தல்) சட்டம் என வழங்கப் பெறும்.

*(2).* இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

*(3)* a *2,3,4,5,6,7,8* ஆகிய பிரிவுகள், *1992-ஆம்* ஆண்டு நவம்பர் திங்கள் *16-ஆம்* நாளில் நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) 7-ஆம் பிரிவானது *1993-ஆம்* ஆண்டு மார்ச்சு திங்கள் *15-ஆம்* நாளிலிருந்தே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## விளம்புகை

*2.* இந்தச் சட்டமானது, அரசமைப்பின் IV-ஆம் பகுதியில், அதிலும் குறிப்பாக, 38-ஆம் உறுப்பிலும், 39-ஆம் உறுப்பின் (b) மற்றும் (c) எனுங் கூறுகளிலும், மற்றும் 46-ஆம் உறுப்பிலும் விதிக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்கின்ற வகையில், அரசின் கொள்கைக்குச் செயல் வடிவங் கொடுப்பதற்காக இயற்றப்படுகிறதென்று இதன் மூலம் விளம்பப்படுகிறது.

## பொருள் வரையறைகள்

*3.* இந்தியச் சட்டத்தில், தறுவாய்க்கேற்ப வேறுவிதமாகப் பொருள் கொள்ள வேண்டியிருந்தாலன்றி,—

(a) ''குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள்'' என்றால், தமிழ்நாடு அரசிதழில் அரசால் அறிவிக்கை செய்யப்படக்கூடியவர்களான, சமூக மற்றும் கல்வி நிலைகளில் பிற்படுத்தப்பட்டவர்களாகவுள்ள குடிமக்களின் வகுப்பினர் அல்லது வகுப்பினர்கள் என்று பொருள்படும் - மற்றும் அது மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபு சமூகத்தினரையும் உள்ளடக்கும்;

(b)''கல்வி நிலையம்'' என்றால்—
இதன் பொருட்டு அரசினால் நிறுவப்பட்ட அல்லது ஏற்பளிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அதிகார அமைப்பு எதனாலேனும் வழங்கப்படும் அல்லது அளிக்கப்படும் சான்றிதழ், பட்டம் அல்லது பட்டயம் எதற்காகவும் அல்லது பிற கல்விச் சிறப்புகள் எவற்றுக்காகவும் தன் மாணவர்களைத் தயார் செய்கிற, பயிற்சி அளிக்கிற அல்லது அவர்களுக்கு வழிகாட்டுகிற நோக்கத்துடன் இயங்குகிற,

(i)பல்கலைக்கழக கல்லூரியொன்றும் அதன் மூலக் கல்லூரியொன்றும் உள்ளடங்கலாக, அரசால் பேணிவரப்படுகிற, அல்லது அரசின் நிதியிலிருந்து உதவி பெறுகிற, அல்லது சட்டத்தின்படி நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனோடேனும் இணைக்கப்பட்டுள்ள கல்லூரி அல்லது பிற கல்வி நிலையம் எதுவும் என்றோ; அல்லது

(ii) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்பளிக்கப்பட்ட நிறுவனம் அல்லது பயிற்சி மையம் எதுவும் என்றோ பொருள்படும்;

(c)''அரசு'' என்றால், மாநில அரசு என்று பொருள்படும்;

(d)''பட்டியல் சாதிகள்'' என்பது,

## தெய்வப் புலவன்

புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்
சித்தம் கலங்கித் திகைப்பதேன்?-வித்தகன்
தெய்வப் புலவன் திருவள்ளுவன் சொன்ன
பொய்யில் மொழியிருக்கும் போது.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

அரசமைப்பில் உள்ள அதே பொருளையே பெற்றிருக்கும்.

(e) "பட்டியல் பழங்குடிகள்" என்பது அரசமைப்பில் உள்ள அதே பொருளையே பெற்றிருக்கும்

**கல்வி நிலையங்களில் இடங்களை ஒதுக்கீடு செய்தல்**

4.(1) நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு ஏதொன்றின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணையுரை எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும், தமிழ்நாடு மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக அமைந்திருக்கின்ற குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் மற்றும் பட்டியல் சாதிகளையும் பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்த நபர்களின் சமூக மற்றும் கல்வி நிலையிலான பிற்படுத்தப்பட்ட நிலைத்தன்மையினைக் கருத்திற்கொண்டு, குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பட்டியல் சாதிகளையும் பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்த நபர்களுக்கும், இம்மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகக் கல்விப் பிரிவு அல்லது புலம் ஒவ்வொன்றிலும் ஆண்டொன்றுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த இட எண்ணிக்கையினைப் பொறுத்த அளவில் இட ஒதுக்கீடானது அறுபத்தொன்பது சதவீதமாக இருத்தல் வேண்டும்.

(2). (1)-ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடஒதுக்கீடானது, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரையும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினரையும், பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்த நபர்களைப் பொறுத்த அளவில், கீழ்க்கண்டவாறு இருத்தல் வேண்டும்—

(a) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் .. முப்பது சதவீதம்

(b) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் .. இருபது சதவீதம் .

(c) பட்டியல் சாதியினர் .. பதினெட்டு சதவீதம் .

(d) பட்டியல் பழங்குடியினர் .. ஒரு சதவீதம்-

**அரசின் கீழுள்ள பணிகளில், நியமனங்கள் அல்லது பதவிகளில் ஒதுக்கீடு செய்தல்.**

5. (1) நீதிமன்றம் பிற அதிகார அமைப்பு எதனின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணையுரை எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், தமிழ்நாடு மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக அமைந்திருக்கின்ற குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்த நபர்களுக்கும் அரசின் கீழுள்ள பணிகளில் போதிய அளவில் பிரதிநிதித்துவம் வழங்கப்படாமலுள்ள நிலையைக் கருத்திற் கொண்டு, குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்த நபர்களுக்கும், அரசின் கீழுள்ள நியமனங்கள் அல்லது பதவிகளுக்கான ஒதுக்கீடு அறுபத்தொன்பது சதவீதமாக இருத்தல் வேண்டும்.

விளக்கம்:— இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, "அரசின்கீழ் வருகின்ற பணிகள்" என்றால்,—

(i) இம் மாநில அரசின் கீழ்;

(ii)இம் மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவையின் கீழ்;

(III) உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனின் கீழும்;

(iv) அரசுக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள கழகம் அல்லது நிறுமம் எதனின் கீழும்; அல்லது

(v) மாநிலச் சட்டமன்றமானது சட்டமியற்றுவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிற பிற அதிகார அமைப்பு எதனின் கீழும் வருகின்ற பணிகளை உள்ளடக்கும்.

(2) (1)-ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட இட ஒதுக்கீடானது, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரையும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரையும் மற்றும் சீர்மரபினரையும் பட்டியல் சாதிகளையும் பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்த நபர்களைப் பொறுத்த அளவில் கீழ்க்கண்டவாறு இருத்தல் வேண்டும்:—

(a) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் .. முப்பது சதவீதம்.

(b) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் .. இருபது சதவீதம்.

(c) பட்டியல் சாதியினர் .. பதினெட்டு சதவீதம்.

(d) பட்டியல் பழங்குடியினர் .. ஒரு சதவீதம்.

**ஒதுக்கீடுகள் பாதிக்கப்படுதல் ஆகாது என்பது.**

6,4,5, ஆகிய பிரிவுகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும், மக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களை அல்லது பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்த மாணவர்கள் அல்லது உறுப்பினர்களின் உரிமைக் கோரிக்கைகளை, தகுதியின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டியவையான 31 சதவீத இடங்கள், நியமனங்கள் அல்லது பதவிகளுக்கும் பரிசீலித்தல் வேண்டும்; மற்றும், குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களை அல்லது பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்த ஒரு மாணவரோ அல்லது உறுப்பினரோ தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றவிடத்து, குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கோ அல்லது நேர்விற்கேற்ப, பட்டியல் சாதிகள் அல்லது பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்த நபர்களுக்கோ ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள், நியமனங்கள் அல்லது பதவிகளின் எண்ணிக்கையானது எந்த வழியிலும் பாதிக்கப்படுதல் ஆகாது.

**குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களை வகைப்படுத்துதல்**

7. 1993-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 15-ஆம் தேதியிட்ட நிலை-9 எனும் எண்ணிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத்துறையின் அரசாணையின் வாயிலாக அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையத்தால் உரிய கால அளவுகளில் அரசிற்கு வழங்கப்படும் அறிக்கைகளின் அடிப்படையில், அரசானது, அவ்வப்போது அறிவிக்கையின்



ஒரு நாட்டிற் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாய பற்று மொழிப் பற்றேயாகும். மொழிப்பற்று இராதவரிடம் தேசப்பற்று இராதென்பது நிச்சயம். தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. ஆதலால், தமிழர்களுக்குத் தாய் மொழிப்பற்று பெருக வேண்டும் என்பது எனது பிரார்த்தனை.

மூலம், இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் எவரெவரென வகைப்படுத்தலாம் அல்லது உள்வகைப்படுத்தலாம்.

### விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்

*8. (1)* அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, விதிகளைச் செய்யலாம்.

*(2)* (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும், குறிப்பிட்டதொரு நாளிலிருந்து அவை நடைமுறைக்கு வருவனவாக வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, எந்த நாளில் அவை அவ்வாறு வெளியிடப்படுகின்றனவோ அந்த நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி வெளியிடப்பட்ட அறிவிக்கைகளனைத்தும், குறிப்பிட்டதொரு நாளிலிருந்து நடைமுறைக்கு வருவனவாக வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை எந்த நாளில் வெளியிடப்படுகின்றனவோ அந்த நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*(3)* இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது வெளியிடப்பட்ட அறிவிக்கை அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு அல்லது வெளியிடப்பட்ட பின்பு அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும், எந்தக் கூட்டத்தொடரில் வைக்கப்பட்டதோ அந்தக் கூட்டத்தொடர் அல்லது அடுத்தக் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அப்பேரவையானது அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதையும் செய்யுமாயின், அல்லது அவ் விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது வெளியிடப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ ஆகாது என அறிவிக்கையோ அல்லது ஆணையோ, அதன் பின்னர், அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்விளைவு பெற்றிருத்தல் வேண்டும், அல்லது நேர்விற்கேற்ப, செயல்விளைவு பெறாது போதல் வேண்டும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி இதற்கு முந்தியே செய்யப்பட்டயாதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி அமைதல் வேண்டும்.

### செல்லத்தக்க தாக்குதல்

*9.* நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணையுரை எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், 1992-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 16-ஆம் நாளிலிருந்து தொடங்கி, இந்தச் சட்டம் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் தேதியுடன் முடிவடைகின்ற கால அளவின்போது, இம்மாநிலத்திலுள்ள கல்வி நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகவும், அரசின் கீழுள்ள பணிகளில் நியமனங்களுக்கும் அல்லது பதவிகளுக்கும் குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்காகவும், பட்டியல் சாதிகளையும் பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்தவர்களுக்காகவும், அரசினால் செய்யப்பட்ட அறுபத்தொன்பது சதவிகித இடஒதுக்கீடும், அத்தகைய இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் செய்யப்பட்ட செயல்எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அனைத்து நோக்கங்களுக்காகவும், அத்தகைய இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபோதும் மற்றும் அத்தகைய செயல் செய்யப்பட்டுள்ளபோதும் அல்லது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளபோதும் எல்லா முக்கிய காலங்களிலும் இந்தச் சட்டமானது நடைமுறையில் இருந்திருந்தாற்போன்றே எப்போதுமே சட்டப்படி செய்யப்பட்டுள்ளனவாக அல்லது எடுக்கப்பட்டுள்ளனவாகவே கருதப்படுதல் வேண்டும்.

### இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்

*10.* இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், அரசானது, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணையொன்றின் வாயிலாக, அவ் விடர்ப்பாட்டினை நீக்குவதற்குத் தேவையானவையென்றோ அல்லது உகந்தவையென்றோ தமக்குத் தோன்றக் கூடிய, ஆனால் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாது அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

வரம்புரையாக:— ஆனால், அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டமானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்ததற்குப்பின்பு, பிறப்பிக்கப்படுதலாகாது.

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் நோக்க-காரண விளக்கவுரை

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆகியோருக்குக் கல்வி நிலையங்களில் இடங்களை ஒதுக்குதல் மற்றும் அரசுப் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல் என்னும் கொள்கையானது. 1921-ஆம் ஆண்டிலிருந்தே தமிழ்நாட்டில் நீண்டதொரு வரலாற்றினைப் பெற்றுவந்துள்ளது. இந்த இட ஒதுக்கீட்டின் அளவானது பெரும்பான்மை மக்களின் தேவைகளுக்கிணங்கிய வகையில், நிலையாக மேல்நோக்கி வளர்ந்துவந்து, தற்போது அது 69 சதவீதம் என்னும் அளவினை எட்டியுள்ளது.

*2.* உச்ச நீதிமன்றமானது. இந்திரா சஹானி (Indira Sawhney)-க்கும் இந்திய அரசுக்குமிடையேயான (AIR 1993 SC பக்கம் 477) வழக்கில், அரசமைப்புச் சட்டத்தின் 16(4) எனும் உறுப்பின்படியான மொத்த இட ஒதுக்கீடுகள், 50 சதவிகிதத்திற்கு மேற்படுதல் ஆகாது என்று கூறி 16.11.1992 அன்று தன் தீர்ப்புரையினை வழங்கியது. நடப்புக் கல்வியாண்டிற்குக் கல்வி நிலையங்களில் சோத்ததுக்கொள்ளப்படுவது குறித்த பிரச்சினை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னர் வந்தபோது, இதுநாள் வரையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த தன் இட ஒதுக்கீட்டுக் கொள்கையினை தமிழ்நாடு அரசு நடப்புக் கல்வி

ஆண்டின் போதும் தொடர்ந்து கடைப்பிடித்து வரலாம் என்றும், அந்த இட ஒதுக்கீட்டு அளவானது அடுத்த 1994-95-ஆம் கல்வி ஆண்டின்போது, தற்போதுள்ளதைக் குறைத்து 50 சதவீதத்திற்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் தொடர்ந்த முன்னேற்றத்தை உறுதி செய்ய மாநில அரசின் தற்போதைய இட ஒதுக்கீட்டுக் கொள்கையானது மீண்டும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதற்காக வேண்டி, தமிழ்நாடு அரசானது, சென்னை உயர்நீதிமன்றத்தின் மேற்சொன்ன தீர்ப்பினை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தனி அனுமதி மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது. இந்திய உச்ச நீதிமன்றமானது, கல்வி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவதைப் பொறுத்த அளவில் இடஒதுக்கீடானது 50 சதவிகிதத்திற்கு மேற்படுதல் கூடாது என்பதை மீண்டும் வலியுறுத்தி இடைக்கால ஆணையொன்றைப் பிறப்பித்துள்ளது.

3. இம் மாநிலத்திலுள்ள மொத்த மக்கள்தொகையில் ஏறத்தாழ 88 சதவித அளவினர் குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரையும் மற்றும் பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்தவர்களாக இருக்கின்ற நிலையில், அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதிலும் 69 சதவீத இடஒதுக்கீட்டுக் கொள்கை ஒன்றுதான், தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் தொடர்ந்த முன்னேற்றத்தை உறுதிசெய்யும் என்பதோடு, மாறி வருகின்ற சூழ்நிலைகளுக்கும் அது வகை செய்யும் என்பதால், மேற்சொன்ன இட ஒதுக்கீட்டுக் கொள்கையினைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வர இயலும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக மைய அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, 1993-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 9-ஆம் நாளில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

4. தமிழ்நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையினரின் உள்ளுணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையில், 1993-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 26-ஆம் நாளில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டமானது, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் 69 சதவித இட ஒதுக்கீட்டினைத் தொடர்ந்து நிறைவேற்றுவதை உறுதிசெய்வதில் எந்தவிதமான ஐயப்பாடோ, காலத்தாழ்வோ இருத்தல் கூடாது என்பதை வலியுறுத்தியது. அந்தக் கூட்டத்தில், அரசமைப்புச் சட்டத்திருத்தமொன்று கொண்டு வரப்பட வேண்டும், அல்லது இம்மாநில அரசு தனிச் சட்டமொன்றை இயற்றுதல் வேண்டுமென்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் மற்றும் சமூக அமைப்புகளும் இம்மாநில அரசின் தற்போதைய இட ஒதுக்கீட்டுக் கொள்கையினைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்காக உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுமாறு மாநில அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளனர். அதற்கிணங்கிய வகையில், சமூக நீதி என்னும் குறிக்கோளை எய்துவதற்காக வேண்டி, தமிழ்நாட்டு மக்களின் மிகப் பெரும்பான்மையினரின் பெருவிழைவிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காகத் தனிச் சட்டமொன்றை ஒரு முன் தேதியிலிருந்தே நடைமுறைக்கு வருகின்ற வகையிலும், ஏற்கெனவே இது குறித்துச் செய்யப்பட்ட செயல்களையும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் செல்லத்தக்கனவாக்குவதற்குத் தேவையான வகைமுறைகளுடன் சேர்த்தும், கொண்டு வருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

5. இச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகின்றது.

## சட்டமன்ற அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு

இச்சட்ட முன்வடிவில் 3,7,8,10 ஆகிய கூறுகள், அவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு விதிகளைச் செய்வதற்கு அல்லது நேர்விற்கேற்ப, ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு அரசிற்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்டுள்ள அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

## சகாப்தம் முடிந்து விட்டது!

**– மாண்புமிகு முதல்வர்**

காஞ்சிப் பெரியவரின் மறைவுக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

காஞ்சி பரமாச்சாரியார், முக்தி அடைந்து விட்டார். இந்திய ஆன்மீக வரலாற்றின் மிகப் பெரிய சகாப்தம் முடிந்து விட்டது என்பதையே அவரது மறைவு உணர்த்துகிறது.



இந்த நூற்றாண்டின் உண்மையான ஆன்மீக மகான் ஆக விளங்கிய அவர் சமாதானத்தையும், ஆன்மீகத்தையும் பரப்பி வந்தார். தயாள உள்ளம் கொண்ட பெரியவர் மிகவும் எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டார். ஆன்மீகத்தின் மேன்மையை நாடு முழுவதும் பரப்பும் புனித சேவையை அவர் செய்து வந்தார்.

தெய்வீகத்தன்மையுடன் விளங்கிய காஞ்சிப் பெரியவரை இலட்சக்கணக்கான மக்கள் உளப்பூர்வமாக நேசித்தார்கள். தங்கள் இதயத்தில் வைத்து பூஜித்தார்கள்.

அவரது போதனைகள் மக்களுக்கு எளிமையான - இறைபக்தியுடன் கூடிய வாழ்க்கையை மேற்கொள்ள, பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

அந்த மகானின் உயர்ந்த போதனைகளும், அறிவுரைகளும் நமக்கு வழிகாட்டியாக அமையும்.



# காவல்துறைக் குடும்பத்துக்குச் சிறப்பு இன்சூரன்ஸ் திட்டம்

தமிழகக் காவல் துறையில் பணியாற்றும் காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் தங்கள் கடமையை ஆற்றும்போது, அவர்கள் உயிருக்கு ஏற்படும் ஆபத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு ஒரு சிறப்பு இன்சூரன்ஸ் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார். இந்தத் திட்டத்தின்கீழ், கடமையை ஆற்றும்போது மரணமடையும் காவல் துறை அலுவலர்களின் குடும்பத்தினர் ஒரு கணிச மான தொகையைப் பெறுவார்கள்.

இந்தத் திட்டத்தின்படி, ஒரு காவல்துறை அலுவலரோ அல்லது காவலரோ பணியில் இருக்கும்போது இறந்தாலோ அல்லது விபத்து காரணமாக மரணமடைந்தாலோ அவரது குடும் பத்தினருக்கோ அல்லது அடுத்த உறவினருக்கோ கீழ்க்கண்டவாறு ஒரு ஒட்டுமொத்தத் தொகை வழங்கப்படும்.

1. காவலர் முதல் கூடுதல் காவல்துறை கண் காணிப்பாளர் வரை - ரூ.1 இலட்சம்

2. காவல்துறைக் கண்காணிப்பாளர் முதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் (ஐ.ஜி) வரை - ரூ. 5 இலட்சம்

3. கூடுதல் காவல் துறை இயக்குநர்கள் - ரூ.7.5 இலட்சம்

4. காவல்துறை இயக்குநர்கள் - ரூ.10 இலட்சம்

இந்தச் சிறப்பு இன்சூரன்ஸ் திட்டத்தை அமல் படுத்துவதற்காக, ஆண்டுப் பிரிமியம் தொகை யான ரூ.36,94,446-க்கான காசோலையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கம்பெனியின் தலைவராகப் பொறுப்பு வகிக்கும் திரு. நடராஜனிடம் வழங்கினார்.

இதேபோல சிறப்புப் பாதுகாப்புப்படை (எஸ்.எஸ்.ஜி) மற்றும் சிறப்பு அதிரடிப் படையை சேர்ந்தவர்களுக்கும் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றும்போது, அவர்கள் உயிருக்கு ஏற்படும் ஆபத்தைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கானச் சிறப்பு இன்சூரன்ஸ் திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்காக, ஆண்டுப் பிரிமியத்தொகை ரூ.21,40,550/-க்கான காசோ லையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திரு. நடராசனிடம் வழங்கினார்.

இந்தத் திட்டத்தின்படி, சிறப்புப் பாதுகாப்புப் படை மற்றும் அதிரடிப்படையைச் சேர்ந்தவர்கள் தங்கள் கடமையை ஆற்றும்போது இறந்தாலோ, நிரந்தர உடல் ஊனமுற்றாலோ அல்லது விபத்து காரணமாக மரணமடைந்தாலோ அவர் எந்தப் பதவியில் இருந்தாலும் அவருக்கோ அல்லது அவரது அடுத்த உறவினருக்கோ ரூ.10 இலட்சம் வழங்கப்படும். இந்த இரு இன்சூரன்ஸ் திட்டங் களும் 1.1.1994 முதல் அமலுக்கு வரும்.

இந்த இரு காசோலைகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இன்சூரன்ஸ் கம்பெனித் தலைவரிடம் வழங்கும்போது, உள்துறைச் செயலர் திரு. கே. மலைச்சாமி, காவல்துறைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால், மற்றும் இன்ஸ் பெக்டர் ஜெனரல்கள் திரு. வி.கே. இராஜ கோபாலன், எஸ். வீரராகவன் ஆகியோர் உடன் இருந்தனர்.



# 20-வது அகில இந்தியச் சுற்றுலா-தொழில் பொருட்காட்சி தொடக்க விழா

சென்னையில் 20-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 9.1.94-ஆம் நாளன்று மிகச் சிறப்பாகத் தொடங்கப்பெற்றது. காமராசர் சாலையில் உள்ள தீவுத் திடலில் அழகுற அமைந்திருக்கும் அறிஞர் அண்ணா கலையரங்கில் நடைபெற்ற இந்த விழாவிற்கு மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு இ.மதுசூதனன் அவர்களைத் தலைமை தாங்குமாறு சுற்றுலாத் துறை துணை இயக்குநரும், பொருட்காட்சித் தனி அலுவலருமான திரு எஸ். துரைராஜ் முன்மொழிந்தார்; அதை சுற்றுலாத் துறை இணை இயக்குநர் திரு எஸ்.எம். சங்கரலிங்கம் வழிமொழிந்தார்.

இவ்விழா, மாண்புமிகு செய்தி- விளம்பரத் துறை அமைச்சர் திரு மு.தென்னவன் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு எஸ். நாகூர்மீரான் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது;

மாண்புமிகு தமிழக அரசுக் கொறடா திரு எஸ். ஜெயக்குமார், எம்.எல்.ஏ., சுற்றுலாத் துறை இயக்குநர் திருமதி ப.சிவகாமி, இ.ஆ.ப., ஆகியோரின் வாழ்த்துரைக்குப் பின் - மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் பொருட்காட்சியினைத் துவக்கிவைத்து விழாப் பேருரையாற்றினார்.

இவர்களுக்கெல்லாம் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பிலும், பொருட்காட்சி அங்காடியில் இடம்பெற்றிருக்கும் அரங்க வியாபாரிகளின் சார்பிலும் பொன்னாடைகள் அணிவிக்கப்பட்டன.

இவ்விழாவிற்கு - தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத், வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு பாலகங்கா ஆகியோரும் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் - அரசு உயர் அதிகாரிகளும் வருகை தந்திருந்தார்கள்.

### வரவேற்புரை

செய்தி-சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்; அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

"தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ஆம் ஆண்டு துவக்கப் பட்டது; ஆனால், 1974-இல் தான் இது போன்ற பொருட்காட்சி பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சி என்ற பெயரில் முதன்முதல் துவக்கப்பட்டது. இது 20-வது அனைத்திந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியாகும். சென்ற ஆண்டு இந்தப் பொருட்காட்சியை 40 இலட்சம் மக்கள் கண்டுகளித்தனர்; அதன்மூலம் அரசுக்கு 111.73 இலட்சம் வருவாய் கிடைத்தது; இந்த ஆண்டு 50 இலட்சம் மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொருட்காட்சி 90 நாட்கள் நடைபெறும்.

### வாழ்த்துரை

சுற்றுலாத்துறை இயக்குநர் திருமதி ப. சிவகாமி, இ.ஆ.ப., அவர்கள் தம் வாழ்த்துரையில் - "தமிழ்நாட்டில் உள்ள கண்கவர் சுற்றுலாத் தலங்களின் சிறப்பினை எல்லோரும் எளிதில் அறிந்து கொள்ள இந்தக் கண்காட்சி வகை செய்கிறது. இதன் காரணமாகவே சுற்றுலாப் பயணிகள் - அயல்நாட்டினர் அதிகம் வருகைதரும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் இந்தப் பொருட்காட்சி நடத்தப்படுகிறது. தமிழக அரசு மூலம், ரூ.590 கோடிக்கு இந்த ஆண்டு மாஸ்டர் பிளான் ஒன்று தயாரித்து அனுப்பப் பட்டுள்ளது. இது அனுமதிக்கப்படுமானால், தமிழ்நாட்டுச் சுற்றுலாத் துறை இன்னும் வளர்ச்சி பெறும் என்றார்.

### அரசுக் கொறடா

மாண்புமிகு தமிழக அரசுக் கொறடா திரு எஸ். ஜெயக்குமார், எம்.எல்.ஏ., அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில் - "மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், சுற்றுலாத் துறையை தொழில் துறையாக்கிப் பெருமை கொண்டிருக்கிறார். அவர்களால் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட நாங்கள், அங்கே கண்ட சுற்றுலா மையங்களைப் பற்றியெல்லாம் அரசுக்கு விரிவான அறிக்கை தரவிருக்கிறோம். இந்த வகையில் மற்ற நாடுகளுக்கெல்லாம் மேலாக சுற்றுலாத் துறையை, விரிவாக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரும்பாடுபட்டு வருகிறார். நூல் வழிக் கல்வி பெற வாய்ப்பற்ற ஏழை எளிய பாமர மக்களும் - அறிவியல் தொழில் போன்ற துறைகளில் நம்நாடு அடைந்துள்ள வளர்ச்சி பற்றி மிக எளிதாகப் புரிந்து

கொள்ளும் வகையில் இத்தகைய பொருட்காட்சிகள் பெரிதும் உதவும்.'' என்று குறிப்பிட்டார்.

### சுற்றுலாத் துறை அமைச்சர்

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு எஸ். நாகூர்மீரான் அவர்கள் பேசியதாவது:

''சுற்றுலாத் துறை மேம்பாட்டுக்காக நம் முதல்வர் அவர்கள் வகுத்துள்ள திட்டங்கள், கொள்கைகள் இன்னும் இருபதாண்டுக் காலத்திற்குப் போதுமானவைகளாகும். இதை மிகப் பெரிய துறையாக உருவாக்கக்கூடிய வகையில் புரட்சித்தலைவி அவர்கள் பொற்காலத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறார். ஆயிரமாயிரம் புத்தகங்களைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகளை, இந்தப் பொருட்காட்சியைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். இந்த ஆண்டுப் பொருட்காட்சியில் மாநில அரசின் 30 துறைகள், மாநில அரசின் 8 நிறுவனங்கள், மற்ற மாநில அரசு - தனியார் நிறுவனங்கள் 5, மத்திய அரசுத் துறை அமைப்புகள் 6 ஆகியவை கலந்து கொள்ளுகின்றன.''

### செய்தித் துறை அமைச்சர்

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதாவது;

''சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமியாக விளங்கிடும் தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரிலே இன்று இந்தப் பொருட்காட்சி தொடங்கி வைக்கப்படுகிறது. புரட்சித்தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில், வெறும் ஆதாயம் கருதிமட்டுமே இத்தகைய பொருட்காட்சிகள் நடத்தப்படவில்லை; தமிழக அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள் பற்றி வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்களும், வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் தெரிந்து கொள்ளவேண்டும் என்கிற பரந்த நோக்கத்துடனேயே இத்தகைய பொருட்காட்சியை அரசு நடத்துகிறது. இங்கே, சென்னையிலே மட்டுமல்ல; மாவட்டத் தலைநகரங்களிலேயும் இதுபோன்ற பொருட்காட்சிகள் அரசால் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. இந்தப் பொருட்காட்சியிலே தமிழகத்திலே உள்ள 23 மாவட்டங்களும் தனித்தனியே அழகுபட அரங்குகளை அமைத்திருக்கின்றன. பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த 208 அங்காடிகள், எல்லாத் தரப்பு மக்களும் வாங்கிப் பயனடையும் வகையில், பல தரப்பட்ட பொருட்களை இங்கே விற்பனைக்கு வைத்துள்ளன. தமிழகம், இந்த ஆட்சியில் எந்த அளவுக்கு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்பதற்கு இது ஒன்றே ஏற்ற உதாரணம் என்று கூறலாம்''.

> அனுபவம்
>
> ● அனுபவம் என்பது
> ஒரு பெரிய ஆசிரியராகும்.
> அது நமக்குப் பல
> விஷயங்களைக் கற்றுத் தருகிறது.
>
> - அண்ணல் காந்தியடிகள்

### கைத்தறித் துறை அமைச்சர்

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

''இத்தனையாண்டுக்காலம் சுற்றுலாத் துறையினைத் தமது பொறுப்பிலே வைத்திருந்தார் மாண்புமிகு தமிழக முதல்வராம் நம் புரட்சித்தலைவி அவர்கள்; பிறகு இந்தத் துறைக்கு நல்லதோர் பாதையைச் செம்மையாகப் போட்டுத் தந்து, அதிலே வெற்றிநடைபோடுமாறு ஆணையிட்டு இரண்டுபேரிடம் ஒப்படைத்தார்கள். புரட்சித்தலைவி காட்டிய வழியிலேயே நடப்பதால் தான் இன்று இந்தத் துறை இவ்வளவு சீரும் சிறப்பும் பெற்று விளங்கி வருகிறது. புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் - அரசு தீட்டிச் செயல்படுத்தும் அருமையான திட்டங்களை அனைவருக்கும் அறிவிக்க வகை செய்வதாக அமைந்திருக்கிறது இந்த வண்ணமிகு பொருட்காட்சி. அதே போலக் கைத்தறித் துறை மூலமாக கவின்மிகு பொருட்காட்சியொன்று ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டு வருகிறது; இங்கேயும் பல்வேறு கைத்தறிச் சங்கங்களும் தனியார் துறை நிறுவனங்களும் கலந்துகொண்டிருக்கின்றன. இந்தப் பொருட்காட்சியின் மூலம், புரட்சித்தலைவி ஆட்சியில் - இருபதாயிரம் பேர் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புப் பெற்று இருக்கின்றனர்.''

### பொதுப்பணித் துறை அமைச்சர்

பொருட்காட்சியினைத் துவக்கி வைத்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார்; அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''இந்தப் பொருட்காட்சியின் நுழைவு வாயிலில், வளரும் தமிழகம் என்று எழுதப்பட்டிருப்பதை நான் பார்த்தேன்; பொன்பூத்த தமிழகத்தின் புகழ்பூத்த வரலாறைப் புரட்சித்தலைவியின் ஆட்சிதான் பொலிவுறப் படைத்துவருகிறது. மாநில அரசுக்காக மத்திய அரசு ஒதுக்கும் திட்ட ஒதுக்கீட்டை இதுவரை அரசாண்ட வேறெந்த முதலமைச்சரும் பெறாத வகையில் அதிகமாகப் பெற்ற ஒரே முதல்வராக நமது இதய தெய்வமாம் புரட்சித் தலைவி அவர்கள் திகழ்ந்து வருகிறார். தூத்துக்குடி அனல்மின் நிலையம், இதுவரை இல்லாதபடி அதிகமாக மின் உற்பத்தி செய்து வருகிறது இப்போது. நாட்டில் எந்த ஒரு பிரச்சினையானாலும் சரி; அதை மிகவும் சாமர்த்தியமாக-சுமுகமாக முடித்து வைக்கும் ஒரே முதல்வராக, இந்தியாவிலேயே நம்முடைய முதல்வர் அவர்கள்தான் திகழ்ந்து வருகிறார். இந்த அரசில், எந்தத் துறையிலும் இலாபமே தவிர, நட்டம் என்பதே இல்லை. சமுதாயத்தில் நலிவடைந்தோருக்கும், சிறுபான்மையினருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் காவல்தெய்வம் போல விளங்கிவரும் புரட்சித்தலைவி அவர்கள் ஒரு சகாப்தம். அதை விளக்கும் இந்தப் பொருட்காட்சி எல்லா வகையிலும் வெற்றிபெறப் பொதுமக்கள் துணை நிற்க வேண்டும்.''

### நினைவுப் பரிசு-நேரம்

இந்த 20-வது அனைத்திந்தியச் சுற்றுலா-தொழில் பொருட்காட்சிக்கு வருகை தந்த முக்கிய விருந்தினர்களுக்கெல்லாம் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இறுதியில் - தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு ஆர். பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

பொது மேலாளர் திரு டி.சி.மதுசூதனன் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

விழா முடிவில் - நடனமணி பாலு குழுவினைச் சேர்ந்த மாணவிகளின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

இப் பொருட்காட்சி சென்னை - தீவுத்திடலில் நாள்தோறும் பிற்பகல் 3 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறும். விடுமுறை மற்றும் விழாக் காலங்களில் காலை 11 மணிக்கே திறக்கப்பட்டு விடும்.

பொது மக்கள் நலன் கருதி - பல்லவன் போக்குவரத்துக் கழகம் மூலம் சிறப் புப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன.

— நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

